ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# வேதாந்த தீபிகை.

பத்ராதிபர்:— கடாதூர் ஸ்ரீநிவாஸாசார்யர், பி. ஏ., பி. எல்.

கார்யதர்சி:— ஆர். ஸ்ரீநிவாஸ ராகவாசார்யர், எம். ஏ.

ஸம்புடம் 14.] ரக்தாக்ஷி ௵, ஆனி ௴. [ஸஞ்சிகை 9.

" த்ரிபுவனகமனம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம் ததாநே ।
வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே ரதிரஸ்து மேऽநவத்யா ॥"

ஸ்ரீபாகவதம். 1-9-23.

## பத்ராதிபரின் குறிப்புகள்.

### ஜீவதசைக்குப் பிறகு நமது ஸ்திதி.

'யாவஜ்ஜீவேத் ஸுகம் ஜீவேத் ருணம் க்ருத்வா க்ருதம் பிபேத் ।
பஸ்மீபூதஸ்ய தேஹஸ்ய புநராகமநம் குத: ॥'

(உயிருடன் இருக்கும் காலத்தில் ஸுகமாய் ஜீவிக்கவேண்டும். கடன் பட்டாவது நெய்யாகவே சாப்பிடவேண்டும். சரீரம் சாம்பலானால் அது திரும்பி வருமா?) என்பான் சார்வாகன். சரீரத்தை விட வேறான ஆத்மா என்பதோர் வஸ்துவை அவன் ஒப்புவதில்லை. ஆகையால் அவனுக்குச் சரீர நாசமே ஆத்ம நாசம். சரீரம் விழுந்த பின்னர் ஒன்றும் கிடையாது. இத்தகைய நாஸ்திக மதம் எக்காலத்திலும் எத்தேசத்திலும் உள்ளது. என்றாலும் அதிலும் ஒரு விசேஷ முண்டு. எவனுக்கும் மரணமென்றால் ஒருவித மான அச்சம் உண்டாகிறது. நாஸ்திக சிரோமணிகளாய் தத்வவாதிகளாய், 'மரணமென்பதும் ஓர் ஸ்வபாவ நியதமான இன்றியமையாத விஷயம்; அதைப் பற்றியென்ன' என்று த்ருடமான நினைவுடன் கூடியவர்களான சிலர் அந்த

ந்த தேச சரித்திரங்களில் காணப்படுவார்களே யாயினும், பொதுவாய் மனிதர்கள் இந்த தேஹத்தோடு வாழ்வு ஒழிந்து போகக்கூடாதென்று எதிர்பார்ப்பவர்களாகவே யிருப்பவர்கள். ஜீவாத்மாவென்று தனித்த வஸ்து வொன்றை அறியாத காட்டுமிராண்டி ஜனங்களும் கூட மரணத்தோடு மனிதன் ஒழிந்து போவதாய் நினைப்பதில்லை. ஆனால் இதுவரையில் உண்டு உடுத்து வாழ்ந்தது போலவே இனியும் நீடூழிகாலம் நடத்தவேண்டுமென்னும் ஆசையினால், மரணத்தின் பிற்பாடு ஏதோ ஒருவிதமான வாழ்வு உண்டென்று நம்பிக்கை கொள்கின்றார்கள். எனினும் அவர்களுக்கு நித்யமான ஆத்ம தத்வத்தின் ஜ்ஞானம் உண்டாவதில்லை. கழிந்த சரீரத்தைப்போலவே வேறொரு சரீரத்துடன் ஐஹிக போகங்களையே பெண்டு பிள்ளை சுற்றத்தார் முதலியவர்களுடன், வேறு மாதிரியாக அநுபவிக்கப் போவதாகவே, அத்யவஸாயம் (தீர்ந்த நினைவு) மிகுந்து அதன் மூலமாய் இச்சரீர வியோகத்துக்குப் பிறகும் வாழ்வுண்டு என்னும் விச்வாஸம் அவர்களுக்கு வ்ருத்தியாகிறது.

இத்தகைய எதிர்கால ஸ்திதியைப் பற்ற யுக்தி விசாரம் பெருகப் பெருக, இவ்வுலகத்தி லநுபவிக்கப்படும் ஸுகதுக்கங்களைக் காட்டிலும் வேறு ஒன்றும் கிடையாது என்னும் நினைவு மாறி, வரப்புகும் வாழ்வில் அவரவர்களுடைய இவ்வாழ்நாளின் நடவடிக்கைகளுக்குத் தக்கபடி இவ்வுலகத்தில் கிடைக்கமுடியாத நிரதிசய போகங்களையோ, கொடுந்துன்பங்களையோ அநுபவிக்கவேண்டுமென்னும் தீர்மானமுண்டாகிறது.

இந்த விதமாகத் தான் மனிதர்களுக்குள் 'மறு ஜன்மம்' என்பதில் நம்பிக்கையுண்டாகிறதென்று ஐரோப்பியக் கல்வியிற் பயின்ற கேவல யுக்திவாதிகளின் கொள்கை. இந்த வாதத்தை அஸ்திவாரமாக வைத்துக்கொண்டு அவ்வோ மதங்களில் பேசப்படும் 'ஜந்மாந்தரம்', 'பரலோகம்' என்பது போன்ற விஷயங்களைப் பரிசீலிக்கிறார்கள்.

இவ்வாதிகள், 'லோகாந்தரம்' அல்லது 'ஜந்மாந்தரம்' என்பதை முதலில் ஈஜிப்திய (Egyptian) மதம் தான் விசாரித்தது என்று நினைக்கிறார்கள். நற்கருமங்களைச் செய்தவனுக்கு வெகுமதியும், தீச்செயல்களைப் புரிந்தவனுக்குச் சிக்ஷையும் பரலோகத்தில் நடக்குமென்று முதலாகச் சொல்லிய மதமும் இதுவேயாம்! அம்மதம் கூறுமாறு:—, 'இறந்தவன் அடக்கம் செய்யப்பட்ட சமாதியிலிருந்து அவனுடைய ஆத்மா கிளம்பி, ஸர்வ வஸ்துக்களுக்கும் உத்பத்திகாரகனாய் ஸ்வயம் ஸித்தனான ஸூர்யனுடன் சேர்ந்து, ஓர் அதிசயமான ஸ்திதியையும் வாழ்வையும் அடைகின்றது. இவ்வாத்மாவும் ஸூர்யனைப் போலவே நித்யமானது; ஸூர்யனுடைய யாத்திரைகளில் தானும் சேர்ந்துவிடுகிறது. எல்லா ஆத்மாக்களுக்கும் இத்தகைய உத்தம கதி கிடைக்குமென்னும் நியம மில்லை. ஏனென்றால், இறந்தவர்களுடைய வாழ்நாள் நடவடிக்கைகளைப் பற்றி, 'ஓஸிரிஸ்' என்னும் தேவதை 42-பஞ்சாயத்தார்களின்

உதவியுடன் விசாரணை செய்து புண்யாத்மாக்களுக்கு மட்டும் இந்த உத்தம கதியைக் கொடுத்துக் குற்றவாளிகளுக்கு ஸ்வரூபநாசத்தையே தண்டனையாக விதித்துவிடும்! புண்யாத்மாக்களுடைய அற்பப் பாபங்களை 'ஓஸிரிஸ்' என்பவர் போக்கி அவர்களைத் தமது ஸகாக்களாக்கிக்கொண்டு அவர்களுக்குப் பூர்ணமான ஸுகத்தையும் அபரிமிதருசியுடன் கூடிய ஆநந்தத்தையு மளிப்பார்'— என்று.

பாரஸீகமதத்தில் காணப்படுவது என்னவென்றால்:— 'ஒரு மனிதன் இறந்தவுடன் அவன் சரீரத்தைப் பூதங்கள் பற்றிவிடுகின்றன. ஆனால் அவனுக்கு மூன்றாவது ராத்திரியில் மறுபடியும் ஜ்ஞாபகம் வந்துவிடுகின்றது. அதன் பிறகு 'சினிவாட்' என்னும் மஹாபயங்கரமான ஒரு பாலத்தின் வழியாய் அழைத்துப்போகப்படுகிறான். பாபிகள் அப்பாலத்தைத் தாண்டிச் செல்ல முடியாது. புண்யம் செய்தவர்களை யஜடர் என்னும் தேவதைகள் ஜாக்கிரதையாய் அந்தப் பாலத்துக்கப்பா லழைத்துக்கொண்டு போகிறார்கள். அங்கிருக்கும் தேசவிசேஷம் ஆநந்தமயமானது. அங்கு தங்கச்சிம்மாதானத்தில் ஆர்மஸ்ட் என்னும் பரதேவதை தன் பரிவாரங்களுடன் வீற்றிருக்கும். அத்தேவதையுடன் புண்யாத்மாக்கள் ஸகாக்களாய் திவ்ய அப்ஸரஸ்ஸுக்களுடன் ஸர்வவித ஆநந்தங்களையுமநுபவிக்கிறார்கள். பாபிகள் கீழ்ச்சொல்லிய பாலத்திலிருந்து நழுவி 'துழாக்' என்னும் ஆழ்ந்த நீர்ப்பாழியில் விழுகிறார்கள். அங்கிருந்து அவர்களை தீவர்ஸ் என்பவர்கள் இழுத்துக்கொண்டுபோய்ப் பலவிதமாகத் துன்பப்படுத்துகிறார்கள். இத்தண்டனைகளின் காலவரையை ஆர்மஸ்ட் என்னும் பரதேவதை நிஷ்கர்ஷிக்கும். இத்தண்டனைகளை, அநுபவிப்பவர்களுக்கு அவர்களுடைய சிநேகிதர் முதலானோர் புருஷகாரமாகவிருந்து பகவானை ப்ரார்த்திப்பதினால் விமோசனமுண்டாகும். இவ்வுலகத்தின் முடிவில் ஒரு மஹாபுருஷன் அவதரித்துப் பூமியின் கொடுமைகளைப்போக்கிப் புண்யமும் ஆநந்தமும் செழித்து ஓங்கும்படி செய்து, ஆர்மஸ்ட்டின் தெய்வ ஆஜ்ஞை நடக்கும்படி செய்வான். பிறகு எல்லா ஜீவர்களுக்கும் புனருத்தாரணம் (Resurrection) உண்டாய், நீடூழ் காலம் பிரிந்திருந்த சினேகிதர்களுக்கும் பந்துக்களுக்கும் மறுபடி ஸமாகமம் நேரிட்டுத் தந்நிமித்தமான அளவற்ற ஸுகத்தை யநுபவிப்பார்கள். அதன்மேல் பாபிகள் இன்னார், ஸுக்ருதம் செய்தவர்கள் இன்னார், என்னும் பிறிவுண்டாகும். துஷ்க்ருத்யம் செய்தவர்கள் படும் ஹிம்ஸைகளைச் சொல்லிமுடியாது. அஹிர்மான் என்னும் தேவதை கீழ்ச்சொல்லிய சினிவாட் பாலத்தில் மிகுந்த பரபரப்புடன் ஸஞ்சரித்துக்கொண்டிருக்கும். மலைகள் உருகி, த்ரவமாய் உருகின உலோகங்களைப்போல் ஆறாக ஓடும். நல்லவர் பொல்லாதவர் உள்பட மனிதகோடிகள் எல்லாம் இந்த அக்னிப்ரவாஹத்தின் வழியாய்ச்சென்று முடிவில் புனிதராவார்கள். அஹிர்மானுக்கும் இம்மாறுபாடுண்டு. துழாக் என்னும் நீர்ப்பாழியும் பரிசுத்தமாய்விடும். அதற்குமேல்

ப்ரபஞ்சத்தில் தீமையென்பதே கிடையாது. ஜீவகோடிகளெல்லாம் மீட்சியில்லாத பேரானந்தத்தை யநுபவிப்பார்கள்—, என்று.

இயேசுகிருஸ்துவின் மதம் கிளம்புமுன் யூத(Jews) நாட்டில் 'மோஸெஸ்' என்பவரின் உபதேசங்கள் தான் மதமாகவிருந்தன. இச்சரீரத்தின் பிறகு உண்டாகும் வாழ்வுக்கும். அதன் முன் இருந்ததுக்கும் ஒருவித வித்தியாஸமும் இருப்பதாகஅவர் நினைக்கக்காணோம். புண்யபாபங்களுக்கு இந்த லோகத்திலேயே பலாபலங்கள் கிடைத்துவிடுவதாக எண்ணினர் போலும். அவர் காலத்துக்குப் பிறகு யூதர்கள் பாரஸீகமதத்தின் கொள்கைகளைப் பின்பற்றியிருக்கலா மென்று ஊஹிக்க இடமிருக்கிறது. இறந்துபோனவன் மறுதசையையடையும்போது இச்சரீரத்தோடேயே கிளம்புகிறான் என்னும் நினைவு அக்காலத்தில் பல மதஸ்தர்களுக்கும் இருந்தது. தேஹம் கழிந்த பிறகு உண்டாகும் வாழ்வில் முன்செய்த கர்மங்களுக்குத் தக்கபடி வெகுமானமோ சிக்ஷையோ நடக்குமென்றும், ஆனதுபற்றி ஒவ்வொருவனும் தன்னுடைய நடவடிக்கைகளுக்குக் கடவுள் முன்னிலையில் உத்தரவாதியாகிறான் என்றும், ஸ்தூலமான அபிப்பிராயங்கள் மட்டும் கிறிஸ்துமதம் அடங்க எல்லாவற்றிலும் காணப்படுகிறது. யூதர்கள் (Jews) ராஜரீகமுறை நாகரீகம் மதக் கோட்பாடு முதலியவற்றில் உயர்ந்த பதவியை யடைந்திருந்தவர்கள். பின்னர் காலவசத்தால் அவர்களுடைய செல்வாக்குக் குறைந்து போனபொழுது மற்றதேசத்தவர்களைப் போலவே இவர்களும் ஸ்வதேச ஸ்வமதாபிமானிகளா யிருந்தபடியால், பகவானுக்கு அந்தரங்க பரிஜநங்களாகிய தங்களுக்கு மீண்டும் நற்காலம் பிறக்குமென்றும்; அப்போது ஈச்வரன் கட்டளையை முன்னிட்டுக்கொண்டு ஒரு மஹாபுருஷன் (Messiah) அவதரித்துத் தங்களுக்கு நல்வார்த்தை கொடுத்து உலகத்தைப் பாபிகளிடத்திலிருந்தும் மீட்டுத் தமது உந்நதமான பதவியைத் திரும்பக் கொடுக்கப்போகிறார், என்னும் ஆழ்ந்த நம்பிக்கையுடன் எதிர்பார்க்கத் துவக்கினார்கள். இந்த நம்பிக்கை நாளடைவில் அவர்களுக்குள் வளர்ந்துவந்ததில், வரப்புகும் மஹாபுருஷன் காலாந்தத்தில் தங்களளவில் மட்டுமின்றியே, உலகத்தையே பரிசுத்தமாக்கிச் சகல ஜீவாத்மாக்களையும் மறுபடியும் கிளப்பி (universal resurrection) உலகத்தில் பகவானுடைய தர்மராஜ்யம் தடையின்றி நடக்கும்படி செய்வார் என்று கிறிஸ்துவின் காலத்திய பிற்பாடரான யூதர்கள் எண்ணினர்போலும்.

அத்தகைய மஹாபுருஷன் பகவானுடைய அம்ச பூதரான தாமே, யென்றார் இயேசுகிறிஸ்து! ஜீவர்களின் புநருத்தாரணமாவது, அப்பொழுதே மெய்ஞானத்தைப் பெற்றுக் கடவுளின் கருணைக்குப் பாத்திரமாவதேயென்றார். இதுதானே 'இறந்தவர்களை யெழுப்புவது' என்றது? என்று சந்தேஹிக்க இடம் கொடுத்தார். ஆனால் பரலோக வாழ்வென்பதைப் பற்றிப் பேசினார் என்பதும் நிச்சயம். அவருபதேசங்களில் இப்படிக் காணப்படுகிறது, அதா

வது—உலகத்தின் முடிவும் தீங்கிலிருந்து மீட்சியும் வெகு விரைவாக நேரி டப்போகின்றது. அப்போது இயேசுவே மறுபடியும் ஆகாய மண்டலத்தில் திவ்ய வஸ்த்ரங்களை தரித்தவராய் திவ்ய ஸிம்மாஸநத்தில் வீற்றிருந்து தேவர்களாலும் தமது அந்தரங்க பரிஜநங்களாலும் சூழப்பட்டவராய்க் காணப் படுவார். மரித்துக் கல்லறைகளில் அடங்கிக் கிடக்கும் ஜீவர்களெல்லாரும் எழும்பி அவர்முன் விசாரணைக்கு வருவார்கள். அவர் செய்யும் தீர்மானங் களைத் தேவர்கள் நிறைவேற்றுவார்கள். ஸுக்ருதம் செய்தவர்களை ஸ்ருஷ் டியின் ஆரம்பத்திலேயே உண்டாக்கப்பட்டுள்ள நிரதிசய போகங்கள் நிறைந்த உத்தமஸ்தாநத்துக் கனுப்புவார். அங்கு தேஜோமயமான உப்பரிகையில் பகவானோடும், இயேசுவோடும், பூர்வர்களான பித்ரு பிதாமஹாதிகளுடனும் மஹான்களுடனும் இப்புண்யாத்மாக்கள் விருந்துகளையருந்தி ஒப்பற்ற ஆநந் தாநுபவம் பெறுவார்கள். புண்யாத்மாக்களினுடைய ஸங்க்யை மிகக் குறைவே. பாபிகளே அதிகம். இவர்களுக் கேற்பட்ட விடம் என்றும் ஓயா மல் கொழுந்துவிட்டெறியும் நெருப்பு நிரம்பியது; சாச்வதமான அழுகை யும் துன்பமும நிறைந்த நரகாநுபவம் தான் அவர்கள் கூறு—என்று.

ப்ரிவி கௌன்ஸில் ஜட்ஜுகளில் ஒருவராகிய கனம் ஸையத் அமீர் ஆலி அவர்கள் எழுதிய 'மஹம்மதிய மதத்தின் தத்வம்' என்னும் புத்தகத்தில், மஹம்மதிய மதத்தில் மரணானந்த ராநுபவத்தைப் பற்றிப் பேசுமிடத்தில், அவர் பூர்வீக மதங்களைப் பராமர்சித்திருப்பதிலிருந்து கீழ்க்கூறியவைகளை ஸங்க்ரஹித்தோம். இந்த விஷயம் ஹிந்து மதத்தில் இருக்கும் ப்ரகாரத்தை அவர் விசாரிக்கவில்லை. இதை அவர் ஸரியாகத் தெரிந்துகொண்டிருப்பரெ ன்று இப்புத்தகத்திலிருந்து அறிய இடமில்லை. நமது மதத்தில் இவருக்கு இருக்கும் தப்பு அபிப்பிராயங்கள் மட்டும் வெகு இடங்களில் புலப்படுகின் றன. இங்கு, நமது மதத்தில் அநாதி ஜன்ம ஸம்ஸார பந்த மோக்ஷங்கள் பேசப்படுகிறதென்று ஒருவரியுடன் அதை விட்டுவிட்டார்.

மஹம்மதிய மதத்தில் இவ்விஷயம் சொல்லப்படும் ப்ரகாரத்தை இவர் கூறுவதாவது:—"மஹம்மது ஆனவர் ஞானிகளான சிலர்க்கு மட்டு மன்றியே உலக இன்பங்களிலேயே உழலும் மூடஜநஸமூஹங்களுக்கும் மதம் உபதே சிக்க முன் வந்தவர். இந்த ஸாமான்ய ஜநங்களுக்குப் பரமபுருஷார்த்தமென் றால் பரிசுத்தமான ஜலம், பால், தேன் முதலியவை பெருகும் நதிகளும், ரஸமயமான பழங்களும், செழித்த தான்யங்களும், வளம் பொருந்திய கழ னிகளுமேயாம். இந்திரிய ஸம்பந்தமொழிந்த ஸுகாதிகளை யவர்களறியார். இத்தகைய ஆநந்தங்கள் மோக்ஷஸாம்ராஜ்யத்தில் உண்டென்று மஹம்மதிய மதக்ரந்தங்களில் காணப்படுகின்றன வாகிலும், ஸர்வ சக்தியான ஈச்வரனு டைய முன்னிலையில் இச்சரீரத்தின் ப்ரதிபந்தகம் நீங்கின நிலைமையில் ஜீவன் கடவுளை நேராகக்கண்டு ஆநந்திப்பதே பரமபுருஷார்த்தமென்னும் விஷயம்

அவற்றில் முக்கியமாகச் சொல்லப்பட்டது. இது மஹம்மதின் அநேக வசனங்களால் தெரியவருகிறது. 'கடவுளுக்கு மிகவும் அந்தரங்கமாகவிருப்பவர்கள் கடவுளின் தேஜஸ்ஸை இரவும் பகலும் பார்த்து அநுபவிப்பார்கள். உடம்பின் வியர்வைத் திவிலையைவிட ஸமுத்திரம் எவ்வளவு பெரியதோ, அப்படியே இந்த ஈச்வராநுபவம் சரீரஸம்பந்தமான ஸுகங்களைக் காட்டிலும் மேற்பட்டது' என்றும், 'நல்லார்களான தம்முடைய ஜீவர்களுக்காக பகவான், ஒருவருடைய கண்ணுக்கும், காதுக்கும், மனதுக்கும் கோசரமல்லாத ஒரு வஸ்து விசேஷத்தை உண்டாக்கியிருக்கிறார். இப்படி ஜீவர்களுக்கென்று ரஹஸ்யமாகக் கடவுள் உண்டாக்கி வைத்திருக்கும் ஆநந்தத்தையாவது பரிசையாவது ஒருவரும் அறியார்' என்றும், 'கடவுள் தமது இருப்பிடத்துக்கு அழைக்கிறார்......................நன்மை செய்தவர்களுக்கு உத்தமமான வெகுமதியும் அளவற்ற லாபமும் இருக்கின்றது' என்றும், பலபடிகளில் மஹம்மது உபதேசித்திருக்கிறார்." என்று. இதனால் ஸர்வேச்வரனோடுகூட இருந்து முடிவில்லாத சாந்தியையும் நன்மையையும் (Eternal peace and goodwill in the presence of their Creator) வருங்காலத்திய பரம புருஷார்த்தமென்று மஹம்மது உபதேசித்ததாயும், மற்ற ஸுகங்களைப் பற்றிப் பேசினது ஸாமான்ய ஜநங்களுடைய புத்தியை யநுஸரித்துச்சொன்னதென்றும் நமது ஆசிரியர் வற்புறுத்தி அதற்குக் கொரானிலிருந்து அநேக வசனங்களை உதாஹரிக்கிறார். இதனால் திவ்யாப்ஸரஸ்ஸுகளின் ஸம்போகம் முதலிய விஷய ஸுகங்களையே உத்தமமான மோக்ஷாநுபவமென்று மஹம்மது உபதேசித்ததாக ஸாமான்மாகச் சொல்லப்படுவது 'மிகவும் பொய்' என்கிறார். முடிவாக, நன்மை செய்தவர்களுக்கு அநேகம் மடங்கான உத்தம போகங்களும் பரமபதத்தில் நிரந்தர வாஸமும் கிடைக்கும். ஆனால் தீவினையாளர்க்கு அவரவர்கள் கர்மங்களுக்குத் தக்கபடி துக்காநுபவமும் அவர்கள் முகங்களை இருள் மூடிய வண்ணம் அவமானம் மூடுவதும் ஸம்பவிக்கும். கடவுள் உத்திரவிலிருந்து தப்பும்படி செய்ய எவரால் முடியும்' என்பதாம் கொரான்!

கீழ்க்கூறிய வண்ணமுள்ள மேற்குத்தேசங்களுடைய ப்ரதான மதங்களின் கோட்பாடுகள் ஸாதாரணமாய் ஆங்கிலக் கல்விமுறையில் யாவரும் அறியும்படி யிருக்குமாதலின், அவற்றைப் பரிசீலித்தல் பயனுள்ளதாகுமெனத் துணிந்தோம். இக்கோட்பாடுகளில் ப்ரகாசமாகும் சில அம்சங்களைக் கவனிக்கவேண்டும். இவைகளிலெல்லாம் மனிதன் இறந்த பிறகு என்னவாகிறான் என்பது மட்டும் ஆலோசிக்கப்படுகின்றதே யன்றி, இச்சரீரத்தில் பிறப்பதற்கு முன் அவன் உண்டா இல்லையா என்னும் ஆலோசனையைக்காணோம்; ஆனால் ஜீவனுடைய ஸ்வரூபத்துக்கு இப்பிறப்புத்தான் ஆரம்பமென்று பொதுவாய் அவைகளின் அபிப்பிராயமென்று சொல்ல ஒரு தடை

யையும் காணோம்! மேலும் ஜீவன் என்பது இச்சரீரமே தானா, அல்லது இதைக்காட்டிலும் வேறுபட்ட தத்வமா என்பதும் விளங்கவில்லை. இறந்த பின் சமாதியில் அடக்கம் செய்யப்பட்டவன் விசாரணை காலத்தில் அதிலிருந்து கிளம்புவதாகவல்லவோ இம்மதங்களில் பல கூறுகின்றன! தவிரவும், இந்த ஒரு ஜன்மத்தில் செய்யும் புண்ய பாபங்களினாலேயே சாச்வதமான மோக்ஷ நரகானுபவங்கள் விதிக்கப்பட்டு விடுகின்றன வென்றும் கூறப்படுகின்றது. ஒரு தடவை நழுவினால் பிறகு விமோசனமே கிடையாது! ஸர்வேச்வரன் இவ்வளவு கடின ஹ்ருதயனாயும் பக்ஷபாதியாயுமிருப்பதற்குக் காரணம் விளங்கவில்லை. ஸ்ருஷ்டியும் ஒரே தடவைதான். மனிதனுக்கு ஜ்ஞானம் சக்தி முதலியவைகளைக் கொடுக்கிறவன் கடவுளே. பின்னையேன் உலக ஸ்ருஷ்டியில் நன்மை தீமைகள், சுக துக்கங்கள், முதலியவைகளின் தாரதம்யங்கள் நானாவிதங்களாக விருக்கவேண்டும்? கீழ்க்கூறிய மதங்களில் உலகத்தில் காலக்ரமத்தில் பாபம் வ்ருத்தியாவதும், அதனால் ஜனங்கள் நாசமடைவதும், பின்னர் ஒரு அவதாரபுருஷன் வந்து உலகத்தைப் புனருத்தாரணம் செய்யப்போவதும், பொதுவாய் உபதேசிக்கப்படுகின்றது. மரணத்தின் பிறகு வாழ்வு என்பது போன்ற இத்தகைய உபதேசங்களுக்கு அடி எது என்று பார்த்தால் மனிதனுக்கு இயற்கையாயுள்ள சபல சித்தமும், சாச்வதமான வாழ்வும் ஸௌகமும் வேண்டுமென்னும் ஆவலும், அவை கிட்டாவிடின் என் செய்வதென்னும் பயமுமே, என்று அறியப்படுகின்றது. அபேக்ஷிக்கப்படும் புருஷார்த்தமோவென்றால், சிலர் நினைவில் அது இவ்வுலக வாழ்க்கையைக்காட்டிலும் வேறுபட்டதாகவில்லை. சிலரோவென்றால், இதன்றி மற்றோர் தேசவிசேஷத்தில் ஈச்வரன் தானே நடத்தும் அரசாக்ஷியின் கீழ் நிரந்தரமான சாந்தியும், நீதியும், இன்பமும் நிரம்பிய வாழ்வே பரம புருஷார்த்தமென்பார். யூதர் போன்ற சில ஜாதியார், அத்தகை வாழ்வானது கடவுளுக்கு அந்தரங்கப்ரியர்களான தங்களுக்கு மட்டுமே யன்றி மற்றவர்க் கில்லை யென்றும் எண்ணுகிறார்கள்! அவர்களுடைய பகவான் என்ன பக்ஷபாதியோ?

இவற்றின் மத்தியில் மற்றோர் விஷயம் கவனிக்கத்தக்கது. ஒவ்வொரு மதத்திலும் ஸாதாரணமாய் மனிதன் தன் வாழ்நாளிற் செய்யும் கர்மங்களுக்குத்தானே உத்திரவாதியாகிறான்; அவற்றின் பலாபலங்களைப் பின்னர் அநுபவித்தே தீரவேண்டும் என்னும் உபதேசம் எந்தப்ரகாரமாகவாவது வற்புறுத்தப்பட்டேயிருக்கின்றது. அதனால் தான் உலகத்தில் புண்ய பாப விவேகமும், அபராதங்களும் குற்றங்களும் யதேச்சையாய் நடவாமலிருப்பதற்கு ஒரு தடையும் இருந்து வருகிறது. ஸாமான்ய ஜனங்களுக்கு அறிவூட்டப்பலவித நரகயாதனைகளும் சொல்லப்படுகின்றன. விவேகிகளைப் பாபத்திலிழியாமற்செய்ய அவை வேண்டா. அவர்களைப்பற்ற ஈச்வரனுடைய ப்ரீதிக்

குறைவு, ஸ்ம்ருதி யிழவு, முதலிய ஆத்மாநுபவங்களின் விச்சேதமே போது மான தடை என்பதும் ஆங்காங்கு புலப்படுகின்றது.

கீழ் ஸங்க்ரஹிக்கப்பட்ட கோட்பாடுகளில் நம்மதத்தில் ஏதாவது ஒரு ப்ரகாரத்தில் காணக்கூடாத விஷயம் ஒன்றுமில்லை. பாரஸீக மதக்கொள் கைகளில் அநேகம் நமது வைதிகமதத்திலிருந்து எடுத்துக்கொள்ளப்பட் டவையென்பதே ஆதுநிக விமர்சகர்களின் தீர்மானம். சிலர், நமது முன் னோர்களும் பாரஸீகர்களின் முன்னோர்களும் ஒரு ஆதி வம்சத்திலிருந்து பிரிந்தவர்களென்றும், அதனால் தான் பாரஸீக மதத்திற்கும் நமது மதத்தி ற்கும் அநேக ஒற்றுமைகள் காணப்படுகின்றனவென்றும் அபிப்பிராயப்படு கிறார்கள். அது எங்ஙனமாயினும், பரதேசங்களிலிருந்து நாம் கடன் வாங்க வேண்டியிருந்த விஷயமொன்றுமில்லை யென்பது திண்ணம். ப்ரஸ்தாபத் திலுள்ள 'மறு ஜன்மம்' முதலிய விஷயங்களுக்கு நம்மதத்தில் கிடைப்பதை ப்பதைப்போன்ற ஸமாதானம் வேறெங்கும் கிடைக்காதென்பதும் நிச்சியம். ஈஜிப்தியர் தான் முதல் முதலாக ஜீவர்கள் மறுபிறப்படைவதைப் பற்றிப் பேசி னார்கள் என்று மேல்நாட்டு விமர்சகர்கள் பேசுவதும், அநாதியான நமது மதக்கொள்கைகளை யறியாமற்சொல்லும் பேச்சு, என்பது அவ்வோ மதங்க ளால் இந்த விஷயம் நிர்ணயிக்கப்படும் ப்ரகாரங்களினாலேயே நன்கு விளங்கும்.

ஈஜிப்திய மதத்திலும் சரி, நமது தேசத்துக்குப் புறம்பான மதங்களி லும் சரி, அவைகளி லெல்லாம் ஈச்வரன், ஜீவன், அசேதனம் (உயிரில்லாப் பொருள்) என்ற தத்வங்களைப்பற்றிய விசாரணையே யில்லை யாகையால், மறு ஜன்மம் முதலியவைகளைப்பற்றிப் பேசும்போது நாம் கீழ்கண்டபடி நிலை யற்ற பேச்சாகவே பேசுகிறார்கள். நாஸ்திக்யமே முக்கியமான மனப்பாங்கு. அது மறைவதுபோல் தோன்றும்; புண்யம் பாபமென்று பேசுவதெல்லாம் புத்தியின் பலயீனத்தின் கார்யம்; அல்லது பிறர் துக்கத்தை ஸஹியாத ஸ்வபாவத்தினாலுண்டானது. நாஸ்திகமான பௌத்தமதத்தின் போக்கு இதுதான். அம்மதத்தில் ஈச்வரனுமில்லை; ஜீவனுமில்லை; எல்லாம் க்ஷணத் தில் முடியத்தக்கது; சூன்யம் தான் தீர்மானமான உண்மை இப்படி உப தேசித்த புத்தர் மிகவும் நெகிழ்ந்த மனத்தையுடையவராதலின், ஒருபுறத் தில் வெறுப்பு மிகச்செய்தே: ஜீவஹிம்ஸையை ஒழிப்பதும் பிறர் நன்மைக் காகவே உழைப்பதும் பரம தர்மமாக மற்றோர் புறத்தில் அவருக்கு விள ங்கிற்று. ஒருவன் செய்யும் நன்மை தீமைகளுக்கு அவன் ஆயுளிலேயே பலாபலங்கள் கிடையாததைப்பற்றியே, ஜந்மங்கள் பலவுண்டென்று அங்கீ கரித்தார் போலும்! நற்காரியத்தால் மனிதன் தனது தன்மையைப் பெருக் குகிறான்; தீவினையால் தனது தன்மையை இருளில் ஆழ்த்திவிடுகிறான், என்றிவருபதேச மிருந்தாலும், தன்மையை எவ்வளவு பெருக்கியும் அதன்

முடிவு சூன்யமானால், சரீரத்தின் பிறகு உண்டாவதைப்பற்றி நினைப்பானேன்? ஆரம்பத்தில் சொல்லியபடியே நிச்சியமான இந்த வாழ்வில் ஸுகம் தேடுவதே கருமமன்றோ!

ஜைநமதமும் இதற்கடுத்தபடிதான். அதுவும் ‘அராஜகம் விஶ்வஜகத்’ (இந்த ப்ரபஞ்சம் ஆளுகிறவனில்லாதது) என்ற கணக்கில் ஈச்வரனையில்லையென்று விட்டது. அதில் ஜீவர்களுடைய கர்மங்களுக்குத் தக்கபடி பலப்ரதானம் பண்ணும் சேதன அதிகாரி கிடையாது. ஆனால் இவ்வாழ்க்கைக்குப் பிறகு இதைவிட மேலான ஸுகங்களுள்ள ஒரு வாழ்வை வேண்டிற்று. அதற்காக லோகாந்தரம் ஜன்மாந்தரம் முதலியவற்றைக் கற்பித்தது. இக்கற்பனையை ஏன் ஏற்கவேண்டுமென்றால், அது இம்மத ப்ரவர்த்தகனை ஸர்வஜ்ஞனென்பானொருவனுடைய பேச்சாகையால் அதை நம்பவேண்டியதென்பார்! தைவந்தானில்லையே, பரலோகத்தைக் கண்டவர் யார்? ஆகையால் வாழ்நாளில் கண்ட ஸுகமே ஸுகமென்றால், இதற்கு அம்மதம் த்ருப்தியாக மறுமொழி சொல்லமுடியாது!

ஈச்வரனை ஒப்பாத வைசேஷிகம் ஸாங்க்யம், யோகம், ந்யாயம், மீமாம்ஸை முதலிய மதங்களின் கதியும் இதுவே! இம்மதங்களிலும் இச்சரீரத்துக்கு முந்தியும் பிற்பாடும் புருஷனுக்குள்ள நிலைமைகள் விவரிக்கப்படுகின்றன. கர்மத்தினால் ப்ரக்ருதி ஸம்பந்தமும் அதில் பந்தமும், பகுத்தறிவினாலும், யோகாப்யாஸத்தாலும் அதினின்று விடுபடுவதாகிய மோக்ஷமும் உண்டாகிறதென்பார்கள். அதற்குப் புண்யகர்மங்களெனப்படுமவை உபகாரகங்களாம், மற்றவை தடைகளாம். இவற்றில் சில ஈச்வரனை ஒப்புக்கொள்ளும்போது கூட, அவனை ஜீவனுக்கு ஒருவித உபகாரம் செய்பவனாக ஒப்புகின்றனவே யன்றி, அவனுடைய ஆஜ்ஞை கார்யகரமாவதில்லை. ஆனதுபற்றி கீழ்க் கூறிய படியே நெகிழ்ந்த மனதினால் லோகாந்தரானுபவங்கள் உண்டாகுமோ என்னும் சங்கையினால் புண்ய பாப நிபந்தனைகளுக்குட்பட வேண்டுமேயன்றி, ‘நின்றநாள் நெடுஞ்சுவர், விழுந்தால் குட்டிச்சுவர்’ என்ற கணக்கில் வாழ்நாளில் எவ்விதத்திலாவது சுகம்பெற முயலுவதே இம்மதங்களைப் பின்பற்றுவோரின் கருமமாயிருக்கும். இவர்கள் சார்வாகனுக்குத் தோள்தீண்டிகளாவது திண்ணம்.

ஈச்வரனை ஒப்புகின்ற வைதிக மதங்களும் பாசுபதம் முதலிய வேதபாஹ்ய மதங்களும் பொதுவாக, நித்யமாயும் ப்ரக்ருதியென்னும் ஜடவஸ்துவைக்காட்டிலும் வேறுபட்டதாயுமிருக்கும் ஜீவாத்மாவையும் இவையிரண்டிலும் வேறுபட்டு இவைகளுக்கு ஸ்வாமியாயிருக்கும் ஈச்வரனையும் ஒவ்வொரு ப்ரகாரமாக நிரூபித்து, இந்த தத்வ விவேகத்தினடியாகச் சேதனன் தான் செய்யும் கருமங்களுக்குப் பொறுப்பாளியாவதைப்பற்றியும், இச்சரீரத்திற்குப் பிறகு அவனுக்கு உண்டாகும் அநுபவங்கள் முதலியவைகளைப்பற்றியும் விசாரிக்கின்றன. இவற்றை மற்றோர் ஸமயத்தில் பராமர்சிப்போம்.

# ஜாதியும், ஒழுக்கமும்.

ஹிந்து மதம், ஸநாதந தர்மம், என்று ப்ரவஸிக்கிப்பவர்களிலும் பலர் ப்ராம்மணர் தஞ்சாதி நியமங்களை யொழிப்பதே கீழ் அழுந்திய சாதியாரை உத்தாரணம் பண்ணுவதென்று நினைக்கிறார்கள். சரீர சுத்தம், ஆஹார சுத்தம், விவாஹ நியமம் முதலியவைகளை முன்னோர் பல நூற்றாண்டுகளாய்ப் பல துன்பங்களுக் கிடையேயும் அநுஷ்டித்து வந்ததினாலன்றோ ப்ராம்மணனுடைய தற்கால நிலைமை இம்மட்டிலிருப்பது! இதனாலேயன்றோ '𑌶𑌮𑍋 𑌦𑌮𑌸𑍍𑌤𑌪𑌃 𑌶𑍌𑌚𑌂 𑌕𑍍𑌷𑌾𑌨𑍍𑌤𑌿𑌰𑌾𑌰𑍍𑌜𑌵𑌮𑍇𑌵 𑌚 । 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌾𑌸𑍍𑌤𑌿𑌕𑍍𑌯𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌕𑌰𑍍𑌮 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌜𑌮𑍍 ॥' (வெளி இந்திரியங்களையும் மனதையும் அடக்குதல், சாஸ்த்ரம் விதித்தமுறையில் விஷயபோகங்களைக் குறுக்குதல், தனக்குறிய கருமங்களைச் செய்ய யோக்யதையைக் கொடுக்கும் சரீரசுத்தி முதலியவை, பிறர் தமக்குச் செய்யும் தீங்கை நினையாத பொறுமை, மனோவாக்குக் காயங்களின் ஒற்றுமை, தத்துவ ஜ்ஞானம், ப்ரும்ம ஜ்ஞானம், வேதார்த்தங்களெல்லாவற்றிலும் உண்மையென்னும் உறுதியான நம்பிக்கை, முதலியவை ப்ராம்மணனுடைய இயற்கையான கர்மங்கள்) என்று ஸ்ரீ கீதாசார்யனும் புகழும் படியானான் ப்ராம்மணன். தாழ்ந்தவர்களைக் கரையேற்ற முன் வருபவர்களுக்கு இத்தகைய குணங்களன்றோ இன்றியமையாதவை. இவற்றைப் பெருக்கும் நியமங்களைக் கடப்பவன் இந்திரிய பரவசனாய் யதேச்சையாய் விஹரிப்பதையே தன்னுடைய தாராளமான நடவடிக்கை (liberal conduct) யென்று பிதற்றுவான்! இதனால் இவன் பிறர்க்குச் செய்யும் உபகாரமெது? தீண்டாச்சாதியார் முதலானோர்க்குப் பரிந்து ப்ராம்மணரொழுக்கத்தைக் குலைக்கப் பார்ப்பவர்கள், தமது காரியத்தால் ப்ராம்மணர்க்காவது பிறர்க்காவது உண்டாகும் பலாபலங்களைச் சற்று யோசித்துப் பார்க்கட்டும். இதனால் ப்ராம்மணன் ஒரு நிபந்தனைக்கு முட்படாமல் யாவரும் அறுவருக்கும் படியான நிலைமைக்கு வருவதும், தாழ்ந்தவரென்போர் துராக்ரஹிகளாய் அஹங்காரம மகாரங்களைப் பெருக்குவதும், பொதுவில் நாட்டில் ஒற்றுமையும் ஸௌக்யமும் குறைவதுமே கைமேற்பலனாக வருவதைக் காண்கின்றோமே! தேசாபிமானிகளும் மதாபிமானிகளும் இதைச் சற்று ஆலோசிக்கட்டும்!

ஸ்ரீ:

## கடிதம்.

வேதாந்த தீபிகை பத்ராதிபருக்கு:—

பொதுவாய் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு பகவத் ராமாநுஜ ஸம்ப்ரதாயத்தின் ஸ்வரூபஸ்வபாவங்களை விசதமாகத் தெரிவிக்க ஏற்பட்டிருக்கும் இந்த வேதா

ந்த தீபிகையை ப்ரகாசிக்க மாநுஷாவதாரமாக எழுந்தருளியிருக்கும் பண்டித சிரோமணிகளான ஸ்ரீ ஸ்வாமிகளுக்கு அடியேன் விஜ்ஞாபனம்.

ஸ்ரீவைஷ்ணவர்களுக்குள் அநேகமான உட்பிரிவுகள் ஏற்பட்ட காரணம் என்ன?

ஆசார்யகோஷ்டியில் 74-ஸிம்ஹாஸநாதிபதிகள் பிறந்த காலம் எப்போது? அதில் மடம், முனித்ரயம், ஸ்வயமாசார்யர்கள் என்று பிரிவு வந்ததற்குக் காரணம் என்ன?

ஜனித்த மாத்ரத்தில் ப்ராஹ்மண்யம் வந்திருந்தபோதிலும்,

ஸந்த்யா ஸ்நாநம் ஜபோ ஹோமோ தேவதாநாஞ்ச பூஜநம் ।
ஆதித்யம் வைஶ்வதேவஞ்ச ஷட்கர்மாணி திநே திநே ॥
ஸந்த்யாவந்தநம் ப்ரஹ்மயஜ்ஞ: பித்ருயஜ்ஞஸ்து தர்ப்பணம் ॥
ஹோமோ தேவோ பலிர்பௌதோ ந்ருயஜ்ஞோ திதிபூஜநம் ॥
தேவாந் தேவகணாம்ஶ்சைவ ருஷீந் ருஷிகணாநபி ।
பித்ரூந் பித்ருகணாம்ஶ்சைவ நித்யம் ஸந்தர்ப்பயேச்சுசி: ॥
வைதிகை: கர்மபி: புண்யைர்நிஷேகாதிர் த்விஜந்மநாம் ।
கார்ய: ஶரீரஸம்ஸ்கார: பாவந: ப்ரேத்ய சேஹ ச ।

இத்யாதி வசநங்களால் கர்மங்கள் மிகவும் அவச்யம் என்றும், கர்மத்தை செய்யாமலிருப்பவர்கள் இன்னமாதிரி என்று பின்வருமாறு ப்ரமாணங்களால் ஏற்படுவதால்,

யதா காஷ்டமயோ ஹஸ்தீ யதா சர்மமயோ ம்ருக: ।
ப்ராஹ்மணஸ்த்வநதீயாநஸ் த்ரயஸ்தே நாமதாரகா: ॥
விப்ர: கர்மயோகேந கைங்கர்யேண நீயதே ஸதா ந: ।
ப்ராஹ்மண்யம் ரக்ஷிதஞ்சிஞ்சி ஸம்ஸ்காரைர் பூர்த்ய வர்த்ததே: ॥
ஜந்மநா ஜாயதே ஶூத்ர: கர்மணா ஜாயதே த்விஜ: ।
வேதபாடீ பவேத் விப்ர: ப்ரஹ்ம ஜாநாதி ப்ராஹ்மண: ।

ஜநித்தமாத்ரத்திலேயே ஒவ்வொருவரும், நான் கந்தாடை, தொட்டாசாரியன், தாதாசாரியன், ஸ்வயமாசார்யன், மற்றவர்கள் மட்டம், நான் உயர்ந்தவன் என்றும், மற்றவர்கள் பார்த்து நான் ஸாப்பிடக்கூடாதென்றும், உத்ஸவாதி காலங்களில் ததீயாராதனம் நடக்கும்போது திரைபோட்டு ஸாப்பிடுவதை நாம் பார்த்திருக்கிறோம். கால்க்ரமேண அநேகமான ஜுகுப்ஸை உண்டாக்கக்கூடிய விவாதங்கள் நடந்து வருகின்றன.

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தத்தின் கூடஸ்தர்கள் பொது என்று ஸ்ரீ பகவத் ராமாநுஜர் ஸாதித்திருக்க விதண்டாவாதம் இன்னும் விடவில்லை.

மாத்வர்கள் ஸ்மார்த்தர்களில் அநேக உட்பிரிவுகளிருந்தாலும், அவர்களுக்குள் ஸமபங்தி போஜன காலங்களில் விவாதங்களைக் காணேம்.

பகவானுக்கு சேஷபூதனுயிருந்தால் போதும் என்றிருக்க இதை ஒட்டி ஸ்ரீ ஆழ்வாரும்,

குலந்தாங்கு சாதிகள் நாலிலும் கீழிழிந்து எத்தனை
நலந்தானிலாத சண்டாள சண்டாளர் களாகிலும்
வலந்தாங்கு சக்கரத்தண்ணல் மணிவண்ணற்கா ளென்னுள்
கலந்தார் அடியார் தம்மடியா ரெம்மடிகளே.

என்று ஸாதித்திருக்க ஸ்ரீவைஷ்ணவர்களுக்குள் இவ்வளவு பேதம் ஏற்படு வானேன். இந்த விதண்டாக்கள் ஏற்பட்ட காலம் எப்போது. இந்த விஷ யங்களுக்கு ஸரியான ஸமாதானம் சாஸ்த்ர மூலமாகவும் அநுஷ்டான பூர் வகமாகவும் தீபிகை மூலமாய் தெரிவிக்கும் ஸ்வாமிக்கு அடியேன் ரூபாய் 10-க்கு குறையாமல் ஸம்பாவனைசெய்ய ஸித்தனுக இருக்கிறேன்.

சிலரை ஸ்ரீவைஷ்ணவர்களுக்குள் பேதம் ஏற்படுவானேன் என்று கேட்டதற்கு ஸரியான ஸமாதானம் சொல்லவில்லை. ஆகையால் இந்த விஷ யத்தை நன்ருய் தெரிந்துகொள்ளும் பொருட்டு இந்த கடிதம் எழுதினேன். லோகோஜ்ஜீவனத்திற்கு மஹர்ஷிகள் தர்ம சாஸ்த்ரங்களை ஏற்படுத்திக்கொ டுத்ததுபோல் இதை வாசிக்கும் பண்டிதர்கள் தீபிகை மூலமாய் தெரிவிக்க வேணுமாய் விநயத்துடன் ப்ரார்த்திக்கிறேன்.

திருமணம் மாசிமீ 15உ } தி. ஸௌந்தர ஊாஸ:

ஸ்ரீ:.

## மாதாபிதாக்களிடத்தில் இருக்கவேண்டிய முறை.

(D. ரகுநாதாசார்யர் - ஸ்ரீரங்கம்.)

அகில ஜகத் சிருஷ்டியில் பல ஜன்மங்களிருக்க மனுஷ்ய ஜன்மம் கிடைப் பது ரொம்ப துர்பலம். அதிலும் ஸ்ரீ வைஷ்ணவ ஜன்மம் ரொம்ப ஸுக்ருத த்தை செய்து பிறவேண்டும். இதில் பூறப்பட நாம் மாதாபிதாவுக்கு செய் யவேண்டிய கடமை என்னவென்று விசாரித்தால் ‘ மாத்ரு தேவோ பவ, பித்ரு தேவோ பவ ’ என்று வேதம் சொல்லுகிறது. அதையே தமிழில் அன்னையும் பிதாவும் முன்னறிதெய்வமென்று ஒளவை எழுதினுள். எதற்காக மாதாபிதாக்களை தெய்வமாக கொண்டாடவேணுமென்று யோஜித்தால், பல காரணங்கள் ஏற்படுகின்றன. முதலில் நம்மை பிறப்பிக்க காரணமாயிருக்கி ருர்கள். பிற்பாடு நம்மை போஷிப்பதில் ரொம்ப ஸாவதானமாயிருந்து நம க்கு நல்ல வித்யைகளை கற்றுக்கொடுத்து ஸதாசார்யாளை அடையும்படியான

விவேகத்தை ஏற்படுத்தி அதின் மூலமாய் எத்தனையோ கோடி ஜென்மமாகி அநாதி அவித்யாகர்மாதி ப்ரவாஹத்தி லொழுகிக் கறையேற விரகற்று அல மருகின்ற நம்மை மோக்ஷ தசையை அடையப் பிராப்தமாக செய்விக்கி ருர்கள். தவிர உலகத்திலிருக்கும்பொழுது மாதாபிதாக்கள் பிள்ளைகளுடைய சௌக்கியத்தைப்பற்றி படும் மனக்கவலைகளும் தேஹ பிரயாஸமும் திரவ்ய செலவுகளும் இவ்வளவென்று சொல்லி முடியாது. நம்முடைய சுக, துக்கங் கிளைப் பற்றி சந்தோஷிப்பதும், வ்யசனப்படுவதும் இந்த உலகத்தில் அவர் களைத்தவிர வேரே ஒருவருமில்லை. இவ்வளவு மஹோபகாரங்களை செய்கிற மாதாபிதாக்களுக்கு நாம் செய்யவேண்டிய பிரத்யுபகார மென்னவென்ருல், அவர்கள் நமக்கு செய்திருக்கும், செய்துகொண்டிருக்கும், அல்லது செய் யப்போகிற உபகாரங்களுக்கு பிரதி உபகாரம் நம்மால் செய்துமுடியாது. அதாவது அதற்கு விலையும், எல்லையும் குறிக்க முடியாது. அப்படியிருந்த போதிலும் நாம் அவர்களிடத்தில் கிருதஜ்ஞதை யுள்ளவர்களாயிருந்து அவர் களை காலை மாலை இரண்டு வேளையிலும் தெண்டம் ஸமர்ப்பித்து அவர் கள் ஆசீர்வாதத்தை பெற்று அவர்கள் மனம் கோணுமலிருந்து கொண்டு அவர்கள் அசக்தர்களாயிருந்தால் அவர்களுக்கு வேண்டிய சிச்ருஷைகளை அத் யந்த பிரியத்தோடு செய்துக்கொண்டுவந்தால் நமக்கு ரொம்ப ச்ரேயஸ்ஸைக் கொடுக்கும். நாம் நம்ம தாய்தந்தையரிடத்தில் நன்றியறிவுடைவர்களாயிருந்து அவர்கள் இஷ்டப்படி கூடியவரையில் நடந்தால் கீழ்தசையில் நம்ம புத்தி ரர்கள் நம்மிடத்தில் அன்போடிருப்பார்கள். தாயாருக்கு வந்தனம் செய்வதி ஞல் உண்டாகும் பயன்களுக்கு எல்லையில்லை. நீதி சாஸ்திரத்தில் அதின் ஏற்றம் பின்வருமாறு சிலாகிக்கப்பட்டிருக்கிறது:—

‘ सपृथ्वीप्रदक्षिणषट्केन काशीयात्रायुतेन च ।
सेतुस्नानशतैर्यच्च तत्फलं मातृवन्दने ॥

ஆறுதரம் பூமியை வலம் வருதலும், பதினாயிரம் தடவை காசிக்கு யாத் திரை செய்து கெங்கையில் தீர்த்தமாடுதலும், அநேக நூறு ஆவர்த்தி ஸே துவில் தீர்த்தமாடுதலும் ஆகிய இவற்ருல் கிடைக்கும் பலம் தாயாரை (ப்ரீ திபூர்வகமாய்) ஒருதரம் ஸேவிக்கிரதினுலேயே வரும்.

‘ नान्नोदकसमं दानं न द्वादश्याः परं व्रतम् ।
न गायत्र्याः परं मन्त्रं न मातुर्दैवतं परम् ॥

அந்நோதகதாநத்துக்கு சமானமான தாநமும், துவாதசி வ்ரதத்தை காட்டி லும் வேறே வ்ரதமும், காயத்ரீயைவிட ச்ரேஷ்டமான மந்த்ரமும், தாயா ரைக் காட்டிலும் தைவமும் வேறில்லை.

தாயாரைப் பேசும் தெய்வமாக எண்ணிக்கொண்டு அவளிடத்தில் அத் தரங்க ப்ரீதியுடன் சிச்ருஷை செய்துவந்தால் வேறு கார்யங்கள் புண்ணிய

சம்பாதனத்திற்காக செய்யவேண்டியதில்லை. தாயார் தகப்பனுர்கள் இருக்கும் பொழுது அவர்களுடைய மகிமை தெரியாமல் சரிவர நடந்துகொள்ளவில்லையே என்று பிற்பாடு சிலபேர்களுக்கு அநுதாபம் பிரக்கலாம். அப்படி அநுதாபம் பிறந்தால் அதுவும் ஸுக்ருதகோடியில் சேருமென்று சில மஹான்கள் அபிப்ராயப்படுகிருர்கள்.

சிறியதாயார், பிதா இவர்களுடைய வாக்யத்தை பரிபாலனம் செய்ய ஸ்ரீ சக்கிரவர்த்தி திருமகன் எவ்வளவு எடையூர்கள் வந்தபோதிலும் அதுகளை பாராட்டாமல் அந்த தர்மத்தை உலகத்துக்கு தெரிவிக்கும்பொருட்டு பட்ட கஷ்டங்களை ஸ்ரீமத் ராமாயணத்திலிருந்து விசதமாக கண்டுகொள்ளலாம்.

‘மாத்ரு தேவோபவ பித்ரு தேவோபவ’ என்கிற தர்மமானது எல்லோருக்கும் பொதுவாயிருக்க ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயஸ்தர்கள் சேஷத்வ ஞானத்தை ப்ரதானமாயுடையவர்கள் ஆகையால் அவச்யம் தவருமல் அநுஷ்டிக்ககடமைப்பட்டவர்களாகிருர்கள். தற்காலம் இந்த தர்மம் சரியாய் அநுஷ்டிக்கப்படுகிறதா என்று பார்த்தால் 100-க்கு 2-பேர்கள் அநுஷ்டித்து வருவார்களா என்று ஸந்தேஹமாயிருக்கிறது. ஆனல் தாய்தந்தையிடத்தில் வைக்கவேண்டிய ப்ரீதியை பிள்ளை பெண்டாட்டியிடம் செய்கிருர்கள். இந்த தர்மத்தை அநுஷ்டிப்பதினல் உண்டாகும் சௌக்கியத்தையும், பெருமையையும் சிறுவர்களுக்கு பாடசாலைகளிலும், பள்ளிக்கூடங்களிலும் போதிக்கும்படி ஏற்பாடு செய்தால் ரொம்ப நலமாயிருக்கும். இதுவரையில் அநுஷ்டிக்காதவர்கள் இனி தாய்தந்தைகளுக்கு தினசரி சாஷ்டாங்க ப்ரணமத்தையும் செய்து அவர்கள் மனம் கோணுமல் கூடியவரையில் நடந்துகொண்டு வந்தால் அவர்களுக்கு ஒரு கஷ்டமும் நேரிடாது, ரொம்ப சௌக்கியமும், செல்வமும், கீர்த்தியும் உண்டாகும். இதை பரீக்ஷையாக செய்துபார்த்தால் கொஞ்சநாளைக்கெல்லாம் தங்கள் தங்கள் அநுபவத்திற்கு நன்ருய் புலப்படும். தாய் தகப்பனுர்களை அலக்ஷியம்பண்ணி அவர்கள் மனம் தபிக்கும்படி செய்யும் குடும்பங்கள் நல்லதசையில் இருக்கமாட்டாது. இது விஷயம் ஊஹித்து கவனித்தால் நன்ருய் எல்லோருக்கும் தெரியும். இந்த எளிதான தர்ம பரிபாலனம் செய்யத் தெரியாமல் ரொம்ப குடும்பங்கள் அவஸ்தைப் பட்டுக்கொண்டிருக்கின்றன. ஆகையால் இந்த தர்மத்தை எல்லோரும் தவருமல் அநுஷ்டித்தால் உலகத்துக்கே க்ஷேமத்தை விளைவிக்குமென்கிறதற்கு ஆக்ஷேபனையில்லை.

# ச்ராத்தம்.

(காடாங்தேத்தி-கோபாலாசார்யர்.)

ஸுசீலன்.—உன்னுடன் ஸஹவாஸம் செய்ததற்காக உனக்குக்கூடுமான வரையில் சொல்லி ஸமாதானப்படுத்துகிறேன். சிரார்த்தமென்பது (1) 'இவ்வுலகிலிருந்து பித்ரு லோகத்தையடைந்த பித்ருக்களைக்குறித்து அவர்களுக்கும் தனக்கும் இஷ்டமானதாயுள்ளதும் சாஸ்த்ரத்தில் விலக்கப்படாததாயுமுள்ள காய்கிழங்குகளைக்கொண்டு சாஸ்திரத்தில்சொல்லியபடி தேசநியமம், காலநியமம், பாத்திர நியமம் இவை முதலிய நியமங்களுடன் செய்யப்பட்ட கருமமாகும்.

ஸுகுணன்:— ச்ரார்த்தத்தைச் செய்கிறவன், ச்ரார்த்தத்தில் புஜிப்பவன், இவர்கள் இருக்கவேண்டிய நியமத்தைச் சொல்லக்கூடாதா.

ஸுசீலன்:—ஆம், சொல்லுகிறேன். ச்ரார்த்தகர்த்தா தாய்தந்தையர்களைக்குறித்து செய்யும் ப்ரத்யாப்திக ச்ராத்தத்திற்கு முப்பது நாளுக்குமுன்னமேயாவது பதினைந்து தினங்களிலாவது அதற்கும் சக்தியில்லாதபக்ஷத்தில் மூன்று தினங்களிலாவது பரான்னம், க்ஷௌரம் இவைகளை விலக்க வேண்டும். ச்ராத்தத்திற்கு முந்திய தினத்திலும் பிந்திய தினத்திலும் ராத்ரியில் போஜனம் பண்ணலாகாது. (2) தாம்பூலம், பல்துலக்கல், எண்ணெய் தேய்த்துக்கொள்ளுதல், க்ஷௌரம், ஸ்த்ரீ ஸங்கமம், மருந்து, அன்னம் ஆகிய இவைகளை விலக்கவேண்டியது, அப்படியே ச்ராத்தத்தில் புஜிப்பவன் (3) மறுபடியும் புஜிப்பது, வழிநடப்பது, ஸ்திரீஸங்கமம், சுமை, வேதமோதுவது கொடுப்பது, வாங்குவது, ஆகிய இவைகளெட்டையும் விட்டுவிடவேண்டியது. இது உபலக்ஷணம், ஸகல கர்த்தாவும்மறுபடியும், புஜிப்பது, அத்யயநம், ஸ்த்ரீஸங்கமம், இவை முதலியவைகள் ச்ரார்த்தத்தில் புஜிக்கிறவன்போல் விட்டுவிடவேண்டியது தான். ச்ரார்த்தத்தில் முதல் நாள் இரவிலே, எல்லோரும் புஜித்து அலுவல் முடிந்தபிறகு ப்ராஹ்மணர்களைத் தான் நேராகவே நாளையதினம் செய்கிற ச்ரார்த்தத்தை நடத்திவைக்க வேண்டுமென்று ப்ரார்த்திக்க வேண்டியது, அல்லது ச்ரார்த்தத்திலாவது அவர்களை வரிக்கவேண்டியது. முதல் நாளும் மறுநாளுமாவது ச்ரத்தையுடன் வர்ஜிக்கவேண்டும்.

---

(1) 𑌪𑍍𑌰𑍇𑌤𑌂 𑌪𑌿𑌤𑍄𑌨𑍍 𑌸𑌮𑍁𑌦𑍍𑌦𑌿𑌶𑍍𑌯 𑌭𑍋𑌜𑍍𑌯𑌂 𑌯𑌤𑍍𑌪𑍍𑌰𑌿𑌯𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 ।
𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌯𑌾 𑌦𑍀𑌯𑌤𑍇 𑌯𑌤𑍍𑌰 𑌤𑌚𑍍𑌛𑍍𑌰𑌾𑌦𑍍𑌧𑌂 𑌪𑌰𑌿𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌮𑍍 ॥ 𑌮𑌰𑍀𑌚𑌿𑌃 ॥
𑌯𑌤𑍍𑌪𑍍𑌰𑌿𑌯𑌂 𑌪𑌿𑌤𑍄𑌣𑌾𑌂 𑌸𑍍𑌵𑌸𑍍𑌯 𑌵𑌾 ॥

(2) 𑌤𑌾𑌮𑍍𑌬𑍂𑌲𑌂 𑌦𑌨𑍍𑌤𑌕𑌾𑌷𑍍𑌠𑌂 𑌚 𑌤𑍈𑌲𑌾𑌭𑍍𑌯𑌙𑍍𑌗𑌂 𑌕𑍍𑌷𑍌𑌰𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌂 ।
𑌰𑌤𑍍𑌯𑍌𑌷𑌧𑌪𑌰𑌾𑌨𑍍𑌨𑌾𑌨𑌿 𑌶𑍍𑌰𑌾𑌦𑍍𑌧𑌕𑍃𑌤𑍍𑌸𑌪𑍍𑌤 𑌵𑌰𑍍𑌜𑌯𑍇𑌤𑍍 ॥

(3) 𑌪𑍁𑌨𑌰𑍍𑌭𑍋𑌜𑌨𑌮𑌧𑍍𑌵𑌾𑌨𑌂 𑌭𑌾𑌰𑌾𑌯𑌾𑌸𑍍𑌯𑌨 𑌸𑌂𑌗𑌮𑌂 ।
𑌦𑌾𑌨𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌗𑍍𑌰𑌹𑌂 𑌹𑍋𑌮𑌂 𑌶𑍍𑌰𑌾𑌦𑍍𑌧𑌭𑍋𑌕𑍍𑌤𑌾𑌷𑍍𑌟 𑌵𑌰𑍍𑌜𑌯𑍇𑌤𑍍

(1) முந்திய தினத்திலும் ச்ரார்த்ததினத்திலும் ஸ்திரீஸங்கமம் செய்யும் ச்ரார்த்தகர்த்தா, தன் ரேதஸ்ஸின் குழியில் தன் பிதிர்க்களை வீழ்த்தி விடுகிறான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. நாள்பட்ட பாண்டங்களில் பாகம் செய்யலாகாது. புதிது பாண்டங்களை உபயோகிக்கவேண்டும். தான் நியமமுள்ளவனாயிருந்து முன்னமே தேவதார்த்தமாக பிராம்மணர்களை வரிக்கப்போகிறவனாய் யஜ்ஞோபவீதத்தை வலம்போட்டுக்கொண்டு நமஸ்கரித்து நாளையதினம் ச்ராத்தம் நடக்கிறபடியால் அதை நிருவிக்னமாய் நடத்திவைக்கவேண்டியது, என்று பிரார்த்தித்து அதற்குப் பிறகு பூணூலை இடம் போட்டுக்கொண்டு; பித்ரு, பிதாமஹன் ப்ரபிதாமஹன், என்ற மூன்று பேர்களுடைய ஸ்தானத்தில் மூன்று ஸ்வாமிகளை வரிக்கவேண்டும், விச்வேதேவர்களுக்கு 2 - பேர்களையாவது ஒருவரையாவது, பிதிருபிதாமஹ பரபிதாமஹர்கள் மூன்று பேர்கள் ஸ்தானத்தில் மூன்றுபேர்களையாவது, மூன்றுக்கும் ஒருவரையாவது வரிக்கவேண்டியது.

ஸுகுணன்:—ஸ்ரார்த்தத்தில் எப்படிப்பட்ட ப்ராஹ்மணர்களை வரிக்கவேண்டும்.

ஸுசீலன்:—அந்த விஷயத்தை விசாரித்தால் வளரும். இருந்தாலும் சுருக்கமாய் சொல்லுகிறேன். அதற்கு ப்ரமாணங்களையும் காட்டுகிறேன். (2) ச்ராத்தத்தின் முறை அறிந்தவன், தைவசிராத்தத்தில் புஜிப்பதற்கு ப்ராஹ்மணனை முயற்சியுடன் பரீக்ஷிக்க வேண்டுவதில்லை. லோகபிரஸித்தியினாலே பொதுவாய் நல்லவனாகிலும் அவனை புஜிப்பிக்கலாம். பிதிர்க்களுக்குச் செய்யவேண்டிய ச்ராத்தம் நேரிடும்பொழுது குலம், ஆசாரம், நடைஉடை பாவனைகளை அறிந்து முயற்சியுடன் பரீக்ஷிக்க வேண்டியது. (3) ச்ரோத்ரியன், அதாவது வேதத்தை முழுமையும் அல்லது அதில் ஒரு சாகையையாவது அத்யயநம் செய்பவன் பொருட்டு தேவர்களுக்குரிய ஹவ்யம், பித்ருக்களுக்குரிய கவ்யங்களையும், கொடுக்கவேண்டும். சாஸ்திர நல்லொழுக்கம், அபிஜனம், ஆசாரம், இவை முதலியவைகளையுடைய அந்த ச்ரோத்ரியனிடத்தில் கொடுக்கப்படும், ஹவ்யகவ்யங்கள் மகாபலன்களை கொடுக்கக்கூடியவைகளாகின்

---

1. பூர்வேத்யுரபரேத்யுஸ்ச ஶ்ராத்தகர்த்தா ஸ்த்ரீநிஷேவணம் ।
வ்யவாயீ ரேதஸோ கர்த்தே மஜ்ஜயத்யாத்மன: பித்ரூந் ॥

2 ந ப்ராஹ்மணம் பரீக்ஷேத தைவே கர்மணி தர்மவித் ।
பித்ர்யே கர்மணி து ப்ராப்தே பரீக்ஷேத ப்ரயத்னத: ।

3. ஶ்ரோத்ரியாயைவ தேயாநி ஹவ்யகவ்யாநி தாத்ருபி:॥(மநுஸ்ம்ருதி 3-149
அர்ஹத்தமாய விப்ராய தஸ்மை தத்தம் மஹாபலம்॥ (மநு 3-128)

றன. (1) எவன் வேதாத்தியயனமில்லாத பிதாவை அடைந்து தான் ச்ரோத்ரியனுகவிருப்பனே! எவன் ச்ரோத்ரியனை தகப்பனை அடைந்து தான் வேதமோதாதிருப்பனே! இவ்விருவருக்குள் ச்ரோத்ரியனுக்கு புத்ரனுயிருந்து தான் ச்ரோத்ரியனில்லாதிருந்தாலும் அவனே ச்ரேஷ்டனென்று சொல்லியிருக்கிறது. ச்ரோத்ரியனுக்குக் ஹவ்யகவ்யங்கள் கொடுபடவேண்டுமென்று சொல்லியிருப்பதால், ச்ரோத்ரியனுடைய பிள்ளையாயும் தானும் ச்ரோத்ரியனுயுமிருந்தால் அவனை ச்ராத்தத்தில் புஜிப்பிக்கவேணும். (2) "வேதவேதார்த்தங்களை அறிந்தவர்களும் நற்குணம் நற்செய்கை உடையவர்களுமான ப்ராஹ்மணர்களை ச்ராத்தத்தில் புஜிப்பிக்கவேண்டியது." என்று சங்கர் சொல்லியிருக்கிருர். ஹரிவம்சத்தில் 'ஶ்ராத்தே ஸந்ந்யாஸ ப்ரஹ்மசாரீ த்ரிதண்டீயதிரேவச' என்பதினுல், த்ரிதண்டிகளான ஸன்யாஸிகள், பிரஹ்மசாரிகள் இவர்கள் ச்ராத்தத்தில் நிமந்த்ரணத்துக்குரியவர்கள், பங்க்திபாவனர்களென்றும் சொல்லப்பட்டது.

ஸுகுணன்:— இப்பொழுது ச்ராத்தத்தில் வரிக்கவேண்டியவர்களைப்பற்றித் தெரிந்துகொண்டேன். இதில் விலக்கவேண்டியவைகளைச்சொல்.

ஸுசீலன்:— நண்பா, விவரமாகச்சொல்லுகிறேன் கேட்பாயாக. (3) ஸ்தேநன் என்றால் திருடன். அது பிரசித்தமே அல்லது 'விப்ராஸ்தேநா ராஜஸேவ்யா வேதவிக்ரயிண: । ஸதேப்ராஹ்மண

---

1. அஶ்ரோத்ரிய: பிதாயஸ்ய புத்ர: ஸ்யாத் வேதபாரக: ।
அஶ்ரோத்ரியோ வா புத்ர: ஸ்யாத் பிதாஸ்யாத் வேதபாரக:॥
ஜ்யாயாம்ஸ தயோர்வித்யாத் யஸ்ய ஸ்யாத் ஶ்ரோத்ரிய: பிதா ॥
மநு, 136—137.

2. வேத வித்ஸுஶீலாந் போஜயேத். சங்கஸ்மிருதி.
பாரதம் அநுஸாசந பர்வம், 129—1.

3. ஸ்தேநாஹி ஸஸ்த்ரநாஸ்ய தக்ஷண ராஜஸேவா உபப்ரேஷிகா: ।
காஷ்டதேவலகா விப்ரா: காணாம்ஸ்யா: ஶிஷ்டமஹிஷகா: ॥
நவாயஸ்வி ப்ரயமேதஸ்த ஸைபாஶு வ்ருத்திகே த்விஜே ।
நபைஶுவ்ருத்திகே வேதவ நாவேதவிதியஸேவிக ।
நஹ்யாதாரள மியாஜீத ஶ்ராத்தே வித்ரு ஸுதாவலி ।
வியாஸம் மஹஸ்வஷம் வ விஶிஷ்ட தேவி வஜயேத ।

ஸம்ஸாரார்: ஜாதி ஸம்ஸாய ஸவேஸா: । ஸம்ஸயம் க்ஷாராதேயஸ்ய ஸ்ரதிமூஹ்ய ஸாஸந்தக: । யஸ்ராயாம் நாவயாம் ஜீத தக்ஷாம் தம் வவர்ஜயேத் ॥’ வித்யையைத்திருடுபவன், குருத்ரோஹம் செய்பவன், பகவானையும் அவனை ப்ரதிபாதிக்கிற வேதத்தையும் தூஷிப்பவன் இவர்களும், எவன் எல்லாவிடங்களிலும்கைநீட்டி ஸம்பாதித்து அந்தப் பொருள்களை தினையத்தனையாவது தேவர்களுக்கும் பிதுர்களுக்கும், அதிதிகளுக்கும் உபயோகப்படுத்தாமல் தன்னுடைய வயிறு நிறைப் பதற்காகவே உபயோகப் படுத்துவானோ அவனும் திருடனென்றே சொல்லப்படுவார்கள். இவர்கள் ச்ராத்தத்திற்கு அநர்ஹர்கள். அபி சஸ்தனென்றால் குற்றமில்லாதிருந்தாலும் இல்லாமல் போனபோதிலும் குற்றம் சாற்றப்பட்டவன். நக்னனென்றால் ‘ யஸ்ஸ்வம் த்யஜ்ய மாஹஸ்ஸ்யம் வாநப்ரஸ்தோ ந ஜாயதே பரிவ்ராஜகோ வா தைத்ரேய ஸ நக்ந: பரிகீர்த்தித: ।’ எவன் க்ருஹஸ்தாச்ரமத்தை விட்டு ஸந்யாஸி யாகவாவது வாநப்ரஸ்தனாகவாவது ஆகவில்லையோ அவன். ஆகுவென் றால் ‘ விபவேஸதி நைவாயாம் ததாதி நஜஹோதிச । தமாஹுராகு தஸ்யாந்நம் புக்த்வா சாந்த்ராயணம் சரேத் ॥’ ஏராள மான விபவமிருக்கும்பொழுது அந்யர்களுக்குக் கொடுக்காது ஹோ மாதிகளையும் செய்யாமலிருப்பானோ அவன் ஆகு, அதாவது எலி என்று சொல்லப்படுமவன். ஷண்டனென்பவன், ‘ நஜஹோதி த்ரிகாலே ந ஸ்நாதி ந ததாதிச । பித்ருதேவார்ச்சநாஹீநஸ்ஸ ஷண்ட: பரிகீர்த்தித: ॥’ ஸரியான காலத்தில் ஸ்நாநம் தானம் இவைகளைச் செய் யாமலும் பித்ரு ச்ராத்தம் தேவபூஜை முதலிய கிரியைகளுமில்லாதவன். ‘ ஸம்ஸாயாம் ஜபதேயஸ்து தபஸ்ஸ்யாத் தபஸ்யதி । நவானுதாயஞ் ஜபத்யங்க்ஷ்: ஸோஜாராஸ்ஸ ப்ரகீர்த்தித: । என்று தன்னைப்புகழ்வது முத லான பிரயோஜனங்களைக் கணிசித்து பாவசுத்தியில்லாமல் எவன் ஜபி ப்பதும் தபிப்பதும் செய்வானோ அவன் மார்ஜாரனென்பவன் ‘ ஸஹா மதா நாம யஸ்ஸஹ்ய: பக்ஷபாதம் ஸமாச்ரயேத் । தமாஹு: குக்குடம் தேவா: தஸ்யாந்நம் விவர்ஜயேத் ’ என்னும் கணக்கில் பெரியோர் கள் கூடியிருக்கும் ஸபையில் எவன் ஒரு திறத்தை சார்ந்து பேசு வனோ அவன் குக்குடனென்றும் வ்யவஹரிக்கப்படுவான். கீழ் கூறிய இவர்களை ச்ராத்தத்தில் நிமந்த்ரணத்திற்காக வரிக்கலாகாது. இன்னம் இதன்பிரிவுகளை மநுஸ்ம்ருதி, மஹாபாரதம் முதலானவைளில் காணலாம். முக்கியமான விஷயங்கள் இன்னும் தெரிந்துகொள்ளவேண்டியிருப்பதால் அதைப்பற்றிச் சொல்லுகிறேன், அதுகளை ஸாவதானமாய்கேட்பாயாக.

ஸுகுணன்:—நண்பா! நான் சொல்லவேண்டுமென்று நினைத்திருக்கையில் நீயே சொல்லிவிட்டாய். எனக்கு இதில்கூட அவ்வளவு கேட்க ஆஸ்தையில்லை இந்த விஷயத்தைப் பார்க்கப்போனால் அஸாத்யமாயிருக்கிறது. இந்த நியமத்துடன் நடப்பது மஹான்களுக்கே ஸாத்யமானது. இந்த கலியுகத்தில் ஸ்ரார்த்தமொன்றுமே ஜீவித்திருக்கிறது. மற்றது அவ்வளவாய் காணப்படவில்லை. இதன் விஷயத்தை கேட்க ஆஸக்தி உண்டாகிறது. பிரதானமாய் ஒரு ஸமாசாரம் கேட்கிறேன் அதற்கு பதில் சொல்வாயாக. ச்ராத்தம் செய்யவேணுமென்பதற்கு ச்ருதிகளையும் தர்ம சாஸ்திரங்களையும் புராணங்களையும் அடுக்கிறாய். தகுந்த யுக்தி சொல்வாயாக.

ஸுசீலன்:—அப்படிச் சொல்லாதே. சாஸ்திரம்தான் முதன்மையான ப்ரமாணம். (1) “ஆதலால் செய்யத்தகுந்தது, செய்யத்தகாதது, என்னும் வ்யவஸ்தையில் சாஸ்த்ரம் பிரமாணமாயிருக்கிறது. சாஸ்திர விதியினால் சொல்லப்பட்டதை அறிந்து இந்த லோகத்தில் கருமம் செய்ய யோக்கியனாயிருக்கிறாய், என்று கீதாசார்யன் அர்ச்சுனனை பார்த்து அருளிச் செய்யவில்லையா. ஆகையால் சாஸ்திரம்தான் பிரமாணம். சாஸ்திரத்துக்கிணங்காத யுக்தி உபயோகப்படாது. (2) ச்ருதியையும், அதற்கு அனுகுணமான ஸ்மிருதியையும், வேதத்திற்கு விரோதமில்லாத யுக்தியைக்கொண்டு எவன் அர்த்தத்தை நிர்ணயிப்பவனோ அவன் தான் தர்மமறிந்தவன், மற்றவனல்லவென்று மநு ஸ்ம்ருதியில் சொல்லியிருப்பதைக் கவனிப்பாயாக. கேவலம் யுக்தியினால் ஒரு முடிவுக்கு வரமுடியாது. யுக்திக்கு எல்லை இல்லை. அதற்கு உதாஹரணம் ஒன்று சொல்லுகிறேன் கேட்பாயாக. (1)மனுஷ்யன் மண்டையோடு, பரிசுத்தமானது, ப்ராணியின் அங்கமாயிருக்கையாலே, பசுவின் அங்கம்போல், என்று

---

1. தஸ்மாச் சாஸ்த்ரம் ப்ரமாணம் தே கார்யாகார்ய வ்யவஸ்திதௌ ।
ஜ்ஞாத்வா சாஸ்த்ர விதாநோக்தம் கர்ம கர்தும் இஹார்ஹஸி ॥
பகவத் கீதா 16-24.

2. ஆர்ஷம் தர்மோபதேசம் ச வேதசாஸ்த்ராவிரோதிநா
யஸ்தர்கேணாநுஸந்தத்தே ஸ தர்மம் வேத நேதர: ॥
வேதாத்ய சாஸ்த்ராவிரோதிநேத்யர்த்த: ।

1. நரசிர: கபாலம் சுசி, ப்ராண்யங்கத்வாத், யதா கவாங்கவத். நரசிர: கபாலம் பக்ஷ:, சுசித்வம் ஸாத்யம், ப்ராண்யங்கத்வாத் ஹேது:,

யுக்திவாதம் செய்தால் இது பயன்படுமோ. (2) எந்த புருஷன் மண்டையோடுண்டோ அது அபரிசுத்தம் என்கிற வேதவாக்கியத்தால் பாதிக்கப்படவில்லையா. (3) நெருப்பு, உஷ்ணமல்லாதது, பதார்த்தமாகையினால் என்று ஒருவன் ஊஹித்தால் பிரத்யக்ஷத்தால் பாதிக்கப்படவில்லையா. அதுபோல் எந்த யுக்திகளும் பிரத்யக்ஷத்திற்கும் சாஸ்திரத்திற்கும் விரோதமில்லாமலிருந்தால் உபாதேயமாகும். தர்கபாண்டித்யத்தாலே நினைத்ததெல்லாம் ஸாதிக்கலாயிருக்கச் செய்தேயிறே நாம் ப்ரமாண சரணராய்ப் போருகிறது என்று ஸ்ரீ தேசிகனருளிச் செய்திருக்கிறார். (4) "யுக்திக்கோ எல்லையில்லை" என்று, ஸூத்ரக்காரரே நிர்ணயித்தார். ஆகையினால் யுக்திவாதம் ஸ்வபக்ஷத்திற்குப் போலவே விபரீத பக்ஷத்திற்கும் ஸாதகமாவதால் அதைக்கொண்டு முடிவுக்கு வரமுடியாது.

ஸுகுணன்:—ஆனால் ச்ராத்தம் செய்வதிற்கு தகுந்த யுக்திவாதம் கிடையாதென்று சொல்லுகிறாய். சாஸ்த்ரம் மாத்திரம் சொல்வதினால் பிரயோஜநமில்லை. யுக்தியும் இருந்தால்தான் மனுஸுக்கு திருப்தி உண்டாகிறது. ஆதுனிக நாகரிகர்ள் வெறும் சாஸ்திரத்தையே நம்பமாட்டார்கள். யுக்தியில் பிரியமுள்ளவர்கள். ச்ராத்தத்தினால் பிரயோஜநமென்ன, லோகத்தில் கீழ்மாடியில் புஜிக்கும் ஒருவன் ஆஹாரத்தினால், மேல்மாடியில் புஜிக்கும் மற்றொருவனுக்கு திருப்தி உண்டாகிறதில்லை என்பதை ப்ரத்யக்ஷமாய் பார்க்கிறோம். அப்படியிருக்க, இங்கிருக்கும் சிலபேர்கள் தங்கள் பிதிர்க்களைக் குறித்து பிராம்மணர்களுக்கு போஜநம் செய்வித்தால் வேறுலகத்திலிருக்கிற மற்றவர்கள் திருப்தி அடைவதெங்ஙனம்? இதென்ன சேராச்சேர்த்தியாயிருக்கிறதே ஆச்சரியம்!

ஸுசீலன்:— நண்பா! நன்றாகயிருக்கிறது. நீ என்ன நாஸ்திகவாதம் பேசத்தலைப்பட்டாய். நாஸ்திகனன்றோ இவ்விதம் பேசுவான்.

ஸுகுணன்:— நான் ராமாயணத்தில் அயோத்யா காண்டத்தில் ஜாபாலி என்கிற மஹர்ஷி ராமனைப் பார்த்து சொல்லிவருமிடத்தில் அஷ்டகையென்றும் ப்ரத்யாப்திக ச்ரார்த்தமென்றும் சொல்லிக்கொண்டு பணம் ஸம்பாதிக்க வழியேற்படுத்திக் கொண்டார்களேயொழிய இவைகளால் பிதிருக்களுக்கு திருப்தி உண்டாவதெங்ஙனே யென்றும், 'दानसंवहनार्थं हि ग्रन्था मेधाविभिः कृताः' ஸம்பாத்யத்திற்கும் வசீகரணத்திற்குமாக மேதாவிகள் கிரந்தங்களை யேற்படுத்தி விட்டார்கள் என்று சொன்னதாக பௌராணிகர் சொல்லக்கேள்வி.

---

2. यस्त्वनार्द्रं शीर्षं, तदशुच्यं, इति श्रुतेः ।

3. वह्निः अनुष्णः, पदार्थत्वात् ।

4. तर्काप्रतिष्ठानादपि—शारीरकमीमांसा 2-1-11.

॥ ஸ்ரீ: ॥

# ஸர்வேஶ்வர காருண்யம்.

(வங்கீபுரம் ஸ்ரீ. உப- ஸ்ரீராமதேசிகாசார்யர், சிரோமணி.)

முன் முதலையால் பிடிக்கப்பட்ட யானையைக் காப்பாற்றின தேவரீரே இப்பொழுது கரிகிரிசிகரத்தில் திவ்யரூபத்துடன் விளங்குகிறீர். முன் தேவரீருக்கு வாஹனமாயிருந்த பக்ஷி ராஜனும் இப்பொழுது அதே ரூபத்துடன் இருக்கிறார். முதலையின் உயிரை நீத்த திருவாழியாழ்வானே இப்பொழுதும் கூர்மையான முனையுடன் ப்ரகாசிக்கிறார். கஜேந்த்ராழ்வான் எப்படி தேவரீருக்கு ரக்ஷ்யவஸ்துவாயிருந்தாரோ, அப்படியே அடியேனும் தேவரீரால் ரக்ஷிக்கப்படவேண்டியிருக்கிறேன். இப்படி இதர அம்சங்கள் எல்லாம் ஒத்திருக்க ஸமஸ்த ப்ராணிகளுக்கும் ஸுஹ்ருத்தான தேவரீர் 'முன் ரக்ஷிக்கப்பட்டது யானை. இப்பொழுது ரக்ஷிக்கப்படவேண்டியவன் மனுஷ்யன்' என்கிற பேதத்தை மாத்ரம் கொண்டு அடியேனை உபேக்ஷிக்கக்கூடாது என்று கஜேந்த்ராழ்வானிடம் காட்டிய கருணையில் மிகவும் ஆழங்காற்பட்டார்.

மேலும் ஸ்ரீந்ருஸிம்மாவதாரத்தில்,— ஸர்வ தேசத்திலும் ஸர்வ காலத்திலும் ஸர்வாவஸ்தைகளிலும் ஸர்வப்ராணிகளாலும் தனக்கு மரணமில்லாதபடி ப்ரும்மாவிடம் வரம்பெற்று ஸர்வேச்வரனையும் த்ருணீகரிக்கும்படி மிக்க அஹங்காரம் நிறைந்த ஹிரண்யகசிபு என்னும் அஸுரன் உலகம் முழுவதும் தன்னையே ஈச்வரனாக நினைத்து ஸர்வேச்வரனுடைய திருநாமங்களை அனுஸந்திக்கும் ப்ரகாரத்திற்கீடாக தன்னுடைய பெயரையே ஸதா உச்சரிக்கும்படி செய்து அவைகளைக்கேட்டு தான் மகிழ்ந்திருந்தவளவில் தன்னுடைய ஔரஸ புத்ரனான ப்ரஹ்லாதன் அதற்கு மாறாக தன்னுடைய ஆஜ்ஞைக்கு உட்படாமல் எம்பெருமானுடைய திருக்கல்யாண குணங்களில் மிகவும் ஈடுபட்டு 'பள்ளியிலோதி வந்த தன் சிறுவன் வாயிலோராயிர நாமம்' என்னும்படி சிறுவயதிலேயே ஸர்வேச்வரனுடைய திருநாமங்களையே ஸதா அனுஸந்திப்பதைக்கேட்டு கோபம் கொண்டவனாய் அக்னிதாஹம், ஸர்ப ஹிம்ஸை முதலியவைகளால் அவன் சரீரத்திற்கு நாசத்தை விளைவிக்கத்துடங்கின வளவில், 'உபமாநமஶேஷாணாம் ஸாதூநாம் யஸ்ஸதாபவத்' என்கிறபடி சாதுகோட்டியுள் கொள்ளப்படும் பரமபாகவதர்களுக்கு ப்ரதமோதாஹரண பூதரான ப்ரஹ்லாதாழ்வானும் காமியான புருஷன் காமினியைப்பற்றிய ஓய்வில்லா சிந்திப்பதால், 'ப்ராஸாதே ஸா பதி பதி ச ஸா' என்று ஸர்வதேசங்களிலும் காமினியை ஸாக்ஷாத்கரிக்குமாப்போல் 'யத்ர நாஹரி திக்ஷு க்ஷணம் ஸாக்ஷி ஸர்வத்ரைவ [illegible]

விஜ்ஞேயே । ஸாஹாநிஸ்த நஹஹ்ஹி ஊ்ரஸாஹ்ராஹிஸா வ விக்ரியா ' என்கிற படி முகூர்த்த காலமும் ஸர்வேச்வராநுபவத்தைவிட்டு அகல மாட்டாதவ ஞய் இடைவிடாமல் அநுபவித்தபடியால் அவனுடைய திவ்யமங்கள விக்ர ஹத்தைப்பற்றிய ப்ரத்யக்ஷ ஸமாநாகாரஜ்ஞானம் ஏற்பட்டு ' நவிவேஷா தெநா மாக்ஷம் தஸ்ரூத்ஹாஹாஷ ஸஂஷ்டி தஃ ' என்கிறபடி தன் சரீரத்தையும் மறந்திருக்க, லங்கையில் ராக்ஷஸ ஜநங்களே ஹிம்ஸித்த திருவடியின் வாலில் பந்தம் கொளுத்த, அவரும் தாபத்தை பொறுக்கமாட்டாதபோது இதை யுணர்ந்த பிராட்டியும் ' ஸீதொஸவஹநூமெ ஃ ' என்று அக்னியைக் குளிர்ந் திருக்கும்படி ஆஜ்ஞாபித்துத் திருவடியின் தாபத்தைத் தணித்தாற்போல், எம்பெருமானும் தாபத்ரயத்தையும் நிவ்ருத்தி செய்யக்கூடிய தன்னுடைய திவ்ய கடாக்ஷதாரைகளால் ப்ரஹ்லாதாழ்வானைக் குளிர நனைத்தவாறே, அக்னி ஸர்ப்பம் முதலியன அவன் சரீரத்தை ஹிம்ஸிக்காமாட்டாமல் தியங்க, இதைக்கண்டு ஆச்சர்யப்பட்ட ஹிரண்யனும் பரதேவதா பாரமார்த்ய ஜ்ஞாநமுள்ள தன் குமாரனால் உச்சரிக்கப்பட்ட ' எங்குமுளன் கண்ணன் ' என்னும் வாக்யத்தைப் பொறுக்கமாட்டாமல், அவ்வார்த்தையை அஸத்ய மாக்க அபிநிவேசத்தால் த்ருடமாக ஸ்தம்பத்தைத் தட்டவே, அதினின்றும் ' ஸத்யம் விதாதும் நிஜப்ருத்ய பாஷிதம் வ்யாப்திம் ச பூதேஷ்வகிலேஷு சாத்மந: । அத்ருஶ்யதாத்யத்புத ரூபமுத்வஹந் ஸ்தம்பே ஸபாயாம் ந ம்ருகம் ந மாநுஷம் ॥' என்கிறபடி தன்னுடைய ஆச்ரிதனுடைய வாக்கை உண் மையாக்குகைக்கு அப்பொழுதே கேவல ஸிம்ஹாக்ருதியுமன்றிக்கே கேவல மநுஷ்யாக்ருதியு மன்றிக்கே இரு ஆக்ருதியாய்க்கொண்டு அதிபயங்கரமான வேஷத்துடன் ஆவிர்பவித்த திவ்ய ஸ்வரூபத்தைக்கண்டு ஹிரண்யன் நடு ங்கி சலிக்கவும் முடியாமல் தியங்க, மிகவும் உக்ரமான தன் த்ருஷ்டிக்கு அவனே இலக்காகச்செய்து ' உளந்தொட்டிரணிய ஞெண் மார்வகலம் பிளந் திட்ட கைகளால் ' என்னும்படி அதிவிசாலமான அவன் மார்பை இரண் டாகப் பிளந்து ' ஜீவாதும் ஸம்ஸாரிணாம் ப்ரஹ்லாத ப்ரியஸோதரா தைவதவீக்ஷண தாரணா ' என்கிறபடி ஆச்ரிதர்களுக்கு ஜீவௌஷத மான தன் கருணாம்ருதம் நிறைந்த திவ்ய கடாக்ஷ தாரைகளால் ப்ரஹ்லா தாழ்வானை நனைத்தருளிய ப்ரகாரம் அவனிடமுள்ள கருணையின் கார்யமெ ன்று ' ஸத்த்வஸ்தா நவஸிமோ: வரிவாயநாய ஸரோம ந்ருஸிம்ஹ கருணா தா பயிஜநுஷ்ஷு ' என்று அருளிச்செய்ததை நம் தேசிகன் வெளி யிட்டார்.

மேலும் சக்ரவர்த்தி திருமகனாக அவதரித்த காலத்தில் ஆச்ரிதர்களிடம் கருணையை ஆவிஷ்கரித்திருக்கும் ப்ரகாரமும் மிக்க வியப்பைத் தரத்தக்கதே.

இராமபிரான் அரண்யத்திற்கெழுந்தருளியபோது அங்கு குஹன் என்னும் வேடன் ப்ராணி ஹிம்ஸையாலேயே ஜீவிக்கும் க்ஷுத்ரர்களுக்கு அதிபதியாயிருக்கையால் அவர்களுடைய பாபங்களுமுள்பட தன்னாலே ப்ரவர்த்திதமாயிருக்கும்படி ஸர்வபாப ப்ரவர்த்தகனாய் பரம நிஹீனனாயிருந்தும் இராமனிடம் அன்பின் பெருக்கால் ‘ न हि रामात् प्रियतरो ममास्ति भुवि कश्चन । ब्रवीम्येतदहं सत्यं सत्येनैव च ते शपे ’ (எனக்கு இவ்வுலகில் இராமனைக்காட்டிலும் ப்ரியமானவன் ஒருவனும் இல்லை. இதை ஸத்யமாகச் சொல்கிறேன்) என்று ப்ரமாணமாய் விண்ணப்பம் செய்து மிக்க சித்தசுத்தியுடன் ராமபத்ரனை ஸர்வவித உபசாரங்களுடன் பூஜிக்க, ஸ்வாமியும் அவனுடைய ராமைகதேவதமாய் நிற்கும் நிலையைக் கண்டு ‘ தம்மை யுகப்பாரைத் தாமுகப்பர் ’ என்கிறபடியே பரம க்ருபையுடன் கூடிய தன் கடாக்ஷ தாரைகளை அவன் மீது வர்ஷித்து, ‘ माता सर्वस्य भूतानाम् ’ என்கிறபடி ஜகன்மாதாவான பிராட்டியை அவனுக்கும் மாதா என்றும் ஸ்வாமினீ என்றும் சொல்லவேண்டியிருக்க அவனுக்கு தோழி என்றும், ‘ स च विज्ञाय याह्यहम् ’ என்கிறபடியே பரமபாகவத சிகாமணியான குஹனை இளையபெருமாள் எம்பெருமானோடொக்க நினைத்து அவருக்கும் தன்னைத் தம்பி என்று வ்யவஹரிக்கவேணுமென்ற சாஸ்த்ரத்தாலே இளையபெருமாளைச் சுட்டுக்காட்டி ‘ உன் தம்பி ’ என்று குஹனுக்கு அறிவித்தும், ‘ सुहृदं सर्वभूतानाम् ’ என்று ஸர்வ ஜகத்துக்கும் ஸுஹ்ருத்தான தனக்கு குஹன் தோழனென்று அநுஸந்தித்தும், இப்படி எம்பெருமானுடைய ப்ரீதிக்கு முக்ய பாத்ரமாயிருக்கிறபடியை நினைத்து ப்ராசீனர்களெல்லோரும் ‘ குஹப்பெருமாள் ’ என்று கொண்டாடும்படியான மேன்மையைக் கொடுத்துமிருக்கிற கருணையின் ப்ரகாரங்களை திருமங்கை மன்னன்,

> ஏழையேதலன் கீழ்மகனென்னாதிரங்கி மற்றவற்கின்னருள் சுரந்து
> மாழைமான் மடநோக்கியுன்தோழி உம்பியெம்பியென்றொழிந்திலேஉகந்துக்
> தோழன் நீயெனக்கிங்கொழி யென்ற சொற்கள் வந்தடியேன் மனத்திருந்திட, ஆழி வண்ண! நின் னடியிணை யடைந்தேன் அணிபொழில் திருவரங்கத்தம்மானே ’

என்கிற பாசுரத்தால் அநுஸந்தித்து, அதையே அவலம்பமாகக்கொண்டு தானும் சரண மடைவதாய் அருளிச்செய்தார்.

மேலும் சித்ரகூடத்தில் எழுந்தருளியிருக்கும் காலத்தில் ஒரு நாள் ஸ்ரீராமபத்ரன் பிராட்டியின் திருமடியில் தன் திருமுடியை வைத்துத் திருக்கண் வளர்ந்தருளுகிற வளவில், ஆச்ரிதன் விஷயத்தில் உள்ள கருணையின் பெருக்கால் பெருமாளுக்கும் 'ந கஶ்சிந்நாபராத்⁴யதி' (குற்றம் செய்யாதவன் எவருமில்லை) என்கிற ஸூக்ஷ்மாம்சத்தை எடுத்துக்காட்டி ஸாபராதர் பிழைகளைப் பொறுப்பிக்கைக்கு புருஷகார பூதையான பிராட்டி திறத்திலே 'சித்திரகூடத்திருப்ப சிறு காக்கை முலை தீண்ட' என்கிறபடியே பரமாபராதத்தைச் செய்து ஆர்த்ராபராதனுன காகஸுரனைக்குறித்து பெருமாள் ப்ருஹ்மாஸ்த்ர ப்ரயோகம் செய்தவாறே அவனும் அதின் ஹிம்ஸையைப் பொறுக்கமாட்டாமல் 'பெற்ற தகப்பன் ரக்ஷிக்கக் கடமைப் பட்டவன்' என்னும் நம்பிக்கையால் இந்த்ரனிடம் போய் வேண்ட, அவனும் 'ஐந்த்³ரோ மஹேந்த்³ர: ஸுரநாயகோ வா த்ராதும் ந ஶக்தா யுதி⁴ ராமவத்⁴யம்' என்கிறபடி பெருமாள் முனிந்தவர்களை ரக்ஷிக்க தனக்கு வல்லமை இல்லாமையாலும், பிதாவானவன் ஹிதபரனுகையாலே ஜகந்மாதாவாவிடம் இவன் செய்த அபராதத்திற்கு இந்த சிக்ஷை உசிதமே என்கிற நினைவாலும் கைவிட, காகனும் இதரதேவதைகளிடம் சென்று அபயத்தை யாசிக்கையில் அவர்களும் 'ஶஸ்த்ராணி வாசஸ்பதிரிந்த்³ர நாயகாஸ்தே ஸ்வயம் ஸக்ருத்³ ஷ்டி க்ஷேமஸ்வ ஸ்வபராயதோ விஹ்வல:' என்கிறபடி பெருமாள் கண் சிவப்புக்கு நடுநடுங்கி தன் தன் நியதவ்யாபாரங்களில் ப்ரவ்ருத்தர்களாகையால் ரக்ஷிக்க சக்தியற்று கைவிட, பிறகு பூததயை மேலிட்ட மஹர்ஷிகளை சரணம் புக அவர்களும் 'யோ விஷ்ணும் ஸததம் த்³வேஷ்டி தம் வித்³யாத³ந்த்யஜரேதஸம்' என்கிறபடி பகவதபராதிகள் சண்டாளர்களென்றும் சாஸ்த்ரார்த்தத்தை அறிந்தவர்களாகையால் இவனுடைய கர்ம சண்டாளனுயிருக்குகையும் 'ஶ்வபாக: பக்ஷிணாம் காக:' என்கிறபடி ஜாதி சண்டாளனுயிருக்குகையையும் கணிசித்து, இவன் உள்ளே புகுவதற்கும் அநர்ஹன் என்று துறத்திவிட இப்படி கண்ணுக்கெட்டிய விடமெல்லாம் 'அனைத்துலகும் திரிந்தோடி' என்கிறபடி கண்ணுக்கெட்டிய விடமெல்லாம் ஓடித்திரிந்து ரக்ஷகன் அகப்படாமல் வேர்த்து விதிர் விதிர்த்து கடைசியில் கொல்லநின்ற பெருமாள் திருமுகம் தானே குளிர்ந்து அவனையே சரணம் புக, வைஷம்ய நைர்க்⁴ருண்யங்கள் ப்ரஸங்கியாமைக்கு ஒரு வ்யாஜ மாத்ரத்தை அபேக்ஷித்து, 'நமக்கார் துணையென நானென்றருள்தரு நாரணனூர்'

(இன்னும் வரும்).

மன்றிக்கே மனஸ்ஸிலும், ‘ अयं लोको नास्ति न पर इति मानी ’ என்கிற படி பரலோகமில்லை என்றும், மறையுரைக்கும் பொருளெல்லாம் மெய்யன்றென்றும் எண்ணுகிற மனோதுஷ்ட நாஸ்திகன் அதிபாதக நாஸ்திகனென்றும், இப்படி மனஸ்ஸாலும் எண்ணி, வாயாலும் சொல்லுமளவன்றிக்கே, நாஸ்திகனுடைய வ்யாபாரத்தைச் செய்யுமவன், அதாவது வேதவிஹிதமான வர்ணாச்ரம தர்மங்களைவிட்டு வேதபாஹ்யாளான பௌத்த ம்லேச்ச கிருஸ்துவாதிகள் செய்யும் வ்யாபாரங்களைச் செய்யுமவன் மஹாபாதக நாஸ்திகனென்றும் மூன்று வித நாஸ்திகர்கள் சொல்லப்பட்டிருக்கிறார்கள். அதில் இரண்டு பேர்களுக்கு கீழ் வஸிஷ்டாதிகள் ப்ராயச்சித்தம் சொல்லியிருப்பதால்,

‘महापातक नास्तिकस्य तु हारीतः — कृत्यदूषी, सोमविक्रयी, वृषलीपतिः, कौमारदारत्यागी, सुरापः, शूद्रयाजकः, मार्गदूषकः, नास्तिकः नास्तिकवृत्तिः कृतघ्नः कूटव्यवहारी ब्राह्मणवृत्तिघ्नः, स्त्र्यादिसंसर्गी पतित संव्यवहारी शिष्टत्यक्तः शरणागतघाती ब्राह्मणवेदविक्रयी इत्येते पञ्च वधपोषकाः सर्वे नाशयन्ति चैषां दोषाः, कृच्छ्रं तीर्त्वा षष्ठ्या गोमयेन सह सर्वे प्रायश्चित्तीयन्ति ’

என்று மஹாபாதக நாஸ்திகனுக்கு ஹாரீதர்சொன்ன ப்ராயச்சித்தத்தை சொல்லிமுடிக்கப்பட்டிருக்கிறது. இதினர்த்தம் கீழ்ச்சொல்லப்பட்ட நாஸ்திக வ்ருத்தி முதலான பாபிகள் கிரீஷ்ம ருதுவில் பஞ்சாக்நி மத்தியிலும், வர்ஷ ருதுவில் நாலுபக்கத்திலும் மழையடிக்கக்கூடிய ஆகாயத்தினவகாசத்திலும், ஹேமந்த ருதுவில் கழுத்தளவு ஜலத்திலும், படுத்திருக்கக்கடவர்கள். இப்படி மூன்று ருதுக்கள் ஆனபின்பு ஒரு மாஸம் கோமூத்திர யாவகத்தை சாப்பிடக்கடவர்கள் என்பது. இப்படி நாஸ்திக வ்ருத்தியை மஹாபாதக நாஸ்திகனென்று சொல்லி அவனுக்கு இக்காலத்திலநுஷ்டிக்கவரிதான ப்ராயச்சித்தத்தையும் சாஸ்திரமும் சாஸ்திரஜ்ஞர்களும் ஸ்பஷ்டமாய்ச் சொல்லியிருக்க, இதை நன்குணர்ந்த ப்ராமாணிகர்கள் ஸந்தியாவந்தனாதி வர்ணாச்ரம தர்மங்களையும் யஜ்ஞோபவீதாதிகளையும் ஆத்யந்திகமாகத் துலைத்து, ஹாரீதாதிகள் சொன்ன நாஸ்திக வ்ருத்திமாத்திர மன்றிக்கே நாஸ்திக மததிலேயே சேர்ந்து சர்ச்சு தொழுதே சிர காலம் போக்கின மத ப்ரஷ்டனைப் பரம நாஸ்திகதமனாக்கி மஹாபாதகநாஸ்திக தமனென்று சொல்லுவது யுக்தமா அல்லது வாஜபேயம் ஸ்வாமி சொல்லுகிறபடி முதலில் கொஞ்சம் ப்ராமாணிகத்தன்மை தோற்ற ஸமபாதகனைச் சொல்லி முடிவில் கேவல வாக்துஷ்டனை உபபாதக நாஸ்திகனுக்குச் சொல்லியிருக்கும் ப்ராயச்சித்தத்தை விதித்து அதை யநுஷ்டிப்பித்து திருமண் பூணூல்களைப்போட்டு சாரங்கபாணியைத் தொழ யோக்யனாக்கி ச்ரோத்ரிய ஸஹபோஜனாதிகளைச் செய்வித்து

பூதனான் பரிசுத்தனாவனென்று சொல்வது யுக்தமா, என்பதை எல்லோரும் நிஷ்பக்ஷபாதமாய் கவனிக்கவேண்டும்.

இப்படி அவன் மஹாபாதகனென்று ஏற்பட்டால் மஹாபாதக நாஸ்திகனுக்குச் சொன்ன ப்ராயச்சித்தத்தை யனுஷ்டிப்பிக்கலாமே என்னில் அது இக்காலத்தில் அசக்யமென்பது எல்லோருக்கும் விசதம்-அநுஷ்டித்தாலும், 'ஸஹஸ்ரம் ஸமயாவஸி' என்கிறஸூத்ர ந்யாயப்படி ஸம்வ்யவஹார்யதை கிடையாது. இப்படி ப்ராயச்சித்தத்தை யநுஷ்டித்தாவது சுத்தனாகவேண்டும். இங்கு நமக்கு ஸம்மதஸ்தர்களோடு ஸஹவாஸம் இல்லாமல் போனாலும் நாம் தனியாய் இருப்போம், நரக நிவிருத்தியாவது வந்தால் போதுமென்றும் எண்ணுகைக்குறுப்பான அநுதாபம் மதப்ரஷ்டர்களில் ஒருவருக்கு மிராதென்பது வாஜபேயம் ஸ்வாமிக்கே விசதம். இப்படி அநுதப்தனாய் இருந்தாலும் இக்காலத்தில் இவனுடைய ப்ராயச்சித்தமநுஷ்டிப்பது கஷ்டமென்றும் அநுஷ்டித்தாலும் ஸஹவாஸார்ஹதை இல்லை என்றுஞ் சொன்னால் வைதிகர்களின் தயயை பாஷாந்தர பண்டிதர்களான கலியுக மேதாவிகள் என்னினைப்பார்களென்று சிலர் சங்கிக்கலாம். நாம், லௌகிகர்கள் நிர்க்ருணனென்று சொல்லுவர்களே என்று பயப்படுகிறதா, அல்லது 'ஜ்யோதிஷம் வ்யவஹாரம் ச ப்ராயஶ்சித்தம் சிகித்ஸகம் । விநாஶாஸ்த்ரேண யோ ப்ரூயாத் தமாஹு: ப்ரஹ்மகாதகம்॥' என்றுசொல்லுகிற சாஸ்திரத்திற்குப் பயப்படுகிறதா? இதைமத்யஸ்தர்களே யோசிக்கவேண்டும். மேலும் இந்த விஷயத்தில் பாபத்தில் பயமன்றிக்கே தன்னாத்மாவிலும் தயையன்றிக்கே கெட்டுப்போன மதப்ரஷ்டனையே நிந்திக்கவேண்டுமே யொழிய ரிஷிகளையும் சாஸ்திரங்களையும் ப்ராமாணிக வைதிகர்களையும் நிந்தித்து என் பயன்?

இப்படிசங்க ஹாரீதாதி ரிஷிகள் மதப்ரஷ்டன் விஷயத்தில் நிர்தயர்களாய் இருந்தாலும் அவர்கள் விஷயத்தில் பரமதயாளுவான தேவலருடைய ஸ்மிருதியில் 20-வர்ஷபர்யந்தம் ப்ராயச்சித்தம் சொல்லியிருப்பதாலும் அதை வாஜபேயம் ஸ்வாமி வசந பூர்வக முதாஹரித்திருப்பதாலும் ஹாரீதாதி ஸ்மிருதிக்கும் தேவலஸ்மிருதிக்கும் விரோதம் வந்தால் காலாநுகுணமாக தேவல ஸ்மிருதியையே நாம் தஞ்சமாகப்பற்றவேண்டியதாவச்யகமாகையாலும், அவர்சொன்னபடி மதப்ரஷ்டனை சேர்த்துக்கொள்வதில் என்ன ஆக்ஷேபமென்று சிலர் யோசிக்கலாம். அதையும் கொஞ்சம் விசாரிப்போம். தேவலஸ்மிருதிகள் இரண்டு தென்படுகின்றன. அதில் ஹேமாத்ரி மாதவ ஸார்வபௌம தீக்ஷிதாதிகளான ப்ராசீன நிபந்தநக்காரர்களுதாஹரித்திருக்கும் பரமர்ஷி தேவலப்ரணீத ஸ்ம்ருதியொன்று. அவர்களொருவராலுமுதாஹரிக்கப்படாததாய் ஆநந்தாச்ரமத்திலவதரித்த அத்யதந தேவலஸ்மிருதி யொன்று. இந்த இரண்டில் வாஜபேயம் ஸ்வாமி உதாஹரித்த கலியுக தேவலஸ்மிரு

தியை ப்ராசீந நிபந்தனகாரர்களும் தததநுஸாரிகளான ப்ராமாணிக தர்மஜ்ஞர்களும் ப்ரமாணமாக ஒப்புக்கொள்ளார்கள். ஆகையால் அது மதப்ரஷ்ட ப்ராயச்சித்தத்திற்கு ப்ரமாணமாகாது. இப்படி இரண்டு தேவலஸ்ம்ருதியுண்டென்று எப்படி அறியப்பட்டதென்னில் அதை எல்லாரும் ஸுலபமாய் அறியும் வழி சொல்லுகிறோம். பதிதனையும் பரமைகாந்திகளையும் ஒன்று சேர்ப்பதுபோல் ஆநந்தாச்ரமத்தில் நாகரலிபியில் அநேக மஹர்ஷி ஸ்ம்ருதிகளோடு ஒன்று சேர்த்து அச்சிடப்பட்ட ஸ்ம்ருதி ஸமுச்சயமென்கிற புஸ்தகத்திலுள்ள ஓரத்தியாய பரிமிதமான கலியுகதேவலஸ்மிருதியை கையில் வைத்துக்கொண்டு கீழ் எழுதப்படும் ப்ராசீன நிபந்தனகாரர்கள் தேவலர் சொன்னதாக உதாஹரித்த வசனங்களிலொன்றாவது அதில் உளதா என்று உன்னித்து நோக்கினால் உண்மை ஸுலபமாய் வெளிப்படும். ' [illegible] ' இது முதலான நூற்றுக்கணக்கான தேவல வசநங்கள் உதாஹரிக்கப்பட்டிருக்கின்றன. தீக்ஷிதீயாஹ்நிக காண்டத்தில் சௌசவிதியில், [illegible] இத்யாதிகளான முடிவு பர்யந்தமுள்ள பரச்சததேவல வசநங்கள் உதாஹரிக்கப்பட்டிருக்கின்றன. தீக்ஷிதீய ப்ராயச்சித்தகாண்டத்தில், [illegible] ' இது முதலான பரச்சத வசநங்களுதாஹரிக்கப்பட்டிருக்கின்றன. இப்படியே மாதவீயஸ்மிருதி ரத்நாகராதிகளிலும் அநேக தேவல வசநங்களுதாஹரிக்கப் பட்டிருக்கின்றன. புஸ்தகங்களை கையில் வைத்துக்கொண்டு புத்தியை நன்கு செலுத்தி அடிபணிந்தில் இருவரும் பராமர்சித்தால் இவ்வசநங்களிலொன்றும் [illegible]

இக்கலியுக தேவலஸ்ம்ருதியில் இல்லை என்பது விசதமாகும். வெகுவாகச் சொல்லி என்ன. இந்த வாஜபேயம் ஸ்வாமி தீபிகையின் 162-ம் பக்கத்தில் தேவலஸ்ம்ருதியில், 'அபரே நிஷ்க்ருதிம் ப்ராஹு: புத்திபூர்வக்ருதேஷ்வபி' (புத்திபூர்வகமாய்ச் செய்யப்படும் பாபத்திலும் ப்ராயச்சித்தம் வேறு சிலர் கூறுவார்கள்) என்று தனக்கு அனுகூலமாய் சொல்லி இருப்பதாய் எடுத்த தேவலஸ்ம்ருதி வசநத்தின் உத்தரார்த்தமாவது இந்த கலியுக ஸ்ம்ருதியில் காணப்படுகிறதா என்பதை கவனிக்கவேண்டும். 'புத்திபூர்வ க்ருதே பாபே ஸக்ருதாவ்ருத்தகே ந நிஷ்க்ருதி:' (புத்திபூர்வகமாகச் செய்யும் பாபத்திலும், அடிக்கடி செய்வதிலும் இங்கு ப்ராயச்சித்தம் கிடையாது.) என்பது இதற்கு பூர்வார்தம். இந்த கலியுக தேவலஸ்ம்ருதி ப்ராமாணிகமானால் ஹேமாத்ரியில் காமக்ருத ஸுராபாந ப்ராயஸ்சித்தத்தில் முதலில் தேவலஸ்ம்ருதியை எடுத்து பின்பு அதிலேயே 'பலாத்தாஸீக்ருதா யே து' என்கிற வசநமிருந்தால் அதைவிட்டு 'பலாத்தாஸீக்ருதா யே ச' என்கிற கௌதம வசநத்தை எடுத்திருக்கமாட்டார். இது இருக்கட்டும். இந்த ஸ்வாமி தவிர முன்பு யாராவது இந்த கலியுக தேவல ஸ்ம்ருதியை யுதாஹரித்திருக்கிறார்களா என்பதை ப்ராமாணிகர்கள் பராமர்சிக்கவேண்டும். இந்த வாஜபேயம் ஸ்வாமி, தாம் தேவல ஸ்ம்ருதிவசநமாயே எழுதின 'அபரே நிஷ்க்ருதிம் ப்ராஹு:' என்கிற வசநமாவது இந்த கலியுக தேவலஸ்ம்ருதியிலிருக்கின்றதா என்பதைக்கூட கடாக்ஷிக்காமலே, 'இந்த தேவலஸ்ம்ருதியானது ம்லேச்சமதத்தில் சேர்ந்தவர்களுக்கு ப்ராயச்சித்தம் விதிப்பதற்காகவே ஏற்பட்டதென்பதை இங்கு மறந்து போகக்கூடாது என்றும்' எழுதி இருப்பது ரொம்பவு மாச்சர்யமாய் இருக்கிறது. இதனால் ப்ராசீன தேவலஸ்ம்ருதியை இந்த ஸ்வாமி கேட்டிருப்பதுகூட இல்லை என்று தெரிகிறது. மேலும் ப்ராசீன தேவலஸ்ம்ருதியில் ஆஹ்நிகாதி ஸர்வ விஷயங்களும் சொல்லி இருக்க அவர் ம்லேச்சாதிகளால் பலாத்க்ருஹீத விஷயத்தில் மாத்திரம் ப்ராயச்சித்தம் சொல்லுவதற்கென்றே தாடியையும் வபனம் பண்ணிக்கொண்டு நிற்கிறாரென்று இந்த ஸ்வாமி எழுதியிருப்பது யுக்தந்தானா. அப்படி ஏகதேசத்திலும் ஏகதேச மாத்திர விஷயமான ஏதாவது ஒரு ஸ்ம்ருதியை யாராவது கண்டதுண்டா? அதை ப்ராமாணிகர்கள் யோசிக்கவும். வெகுவாகச் சொல்லி என்ன. மதப்ரஷ்டனை மதத்தில் சேர்ப்பதற்காகவே ஸ்ம்ருத்யாபாஸத்தையும் ஸ்ம்ருதியோடு சேர்த்தச்சிட்டதும் பண்டிதர்கள் அதைப் பராமர்சிக்காமலே உதாஹரிப்பதும் கலிகோலாஹலகார்யமே. இத்தோடு இதை நிறுத்துவோம்.

இனி கலியுக தேவலஸ்ம்ருதி தானாவது வாஜபேயம் ஸ்வாமிக்கு அனுகூலமா என்பதைக் கொஞ்சம் விசாரிப்போம்.

ஆநந்தாச்ரம தேவலஸ்மிருதியில் ஆரம்பத்தில்.—

'ம்லேச்சைர்நீதா ஹி கத²ம் ஶுத்³தி⁴மவாப்நுயு꞉
ப்³ராஹ்மணா꞉ க்ஷத்ரியா꞉ வைஶ்யா꞉ ஶூத்³ராஶ்சைவாநுபூர்வஶ꞉।
கத²ம் ஸ்நாநம் கத²ம் ஶௌசம் ப்ராயஶ்சித்தம் கத²ம் ப⁴வேத்
கியத்காலம் ஸ்தி²தஸ்யைஷ தத்³வதா³ஸ்வ ஸவிஸ்தரம்॥'

என்று இரண்டு ச்லோகங்கள் ப்ரச்னரூபமாகக் காணப்படுகின்றன. இதுக ளில், 'ம்லேச்சஸம்பர்கதோ³ஷேண கத²ம் ஶுத்³தி⁴மவாப்நுயு꞉' என்று கேளாமல், 'ம்லேச்சைர்நீதா ஹி' என்று விசேஷிக்க நீஞாதுவை ப்ர யோகித்து ப்ரச்நம் பண்ணின மஹர்ஷிகள் தன்னபிஸந்தி ப்ரயத்னமொன்று மன்றிக்கே, பலாத்காரத்தால் நேர்ந்த மிலேச்சாபநயந ரூபமான அபுத்தி பூர்வக பாபத்திற்கே ப்ராயச்சித்தம் கேட்டார்கள் என்பதை சப்தார்த்தம் தெரிந்தவர்கள் அபலபிக்க முடியாது. 'நௌகா தீரம் நீதா, அஜா க்³ராமம் நீதா, ப்³ராஹ்மண꞉ காராக்³ருஹம் நீத꞉' இத்யாதி ப்ரயோகங்களில் அசேத நமான ஓடத்திற்கோ திர்யக்கான ஆட்டுக்கோ சேதநவிசேஷமான பிராம்மண னுக்கோ தீர கிராம காராகிருக ஸம்பந்தங்கள், ஸ்வேச்சையினுலாவது ஸ்வ ப்ரயத்நத்தினுலாவது நேர்ந்தன என்று சொல்ல முடியுமோ. அந்த ஸம் பந்தங்களுக்கு ஓடத்தின் சலனமும், ஆடு பிராம்மணர்களுடைய கமனமும் கூடக் காரணமாய் இருந்தாலும் அதுகளுக்குங்கூட ஓடக்காரன், ஆட்டுக்கா ரன், ஸேவகன் முதலானேர்களுடைய, இச்சையும் பிரயத்னமும் வ்யாபா ரமுமே காரணமே யொழிய ஓடம் முதலானதுகளின் சலநாதிகள் ஸ்வ தந்திரமாய் காரணமாகாது. 'ஸம்யோகா³வச்சி²ந்ந க்ரியாநுகூலவ்யா பார꞉ நீஞர்த²꞉' என்று சாஸ்த்ரஜ்ஞர்கள் நிர்ணயித்திருக்கிறார்கள். ஆகையால் நீதனென்றுலே தன்னிச்சையன்றிக்கே இதரனுல் கொண்டுபோகப் பட்டவனென்றே அர்த்தம் கொள்ளவேண்டும். இப்படி இதினர்த்தமிருக்க, வாஜபேயம் ஸ்வாமி 166-ம் பக்கத்தில் முதலில், 'ம்லேச்சைர்நீதேந' 'ம்லேச்சரால் கொண்டுபோகப்பட்டவனுல்' என்று பொதுவாகச் சொல்லப்பட் டிருக்கிறதே யல்லது புத்தி பூர்வகமா பலாத்காரமாவென்று விசேஷிக்கப்பட வில்லை. ஆகையாலந்த வசநத்தில் ஸம்சயத்திற்கு இடமில்லை என்று எழுதுகிறார். இதை வித்வான்கள் கவனிக்கவும். ஆகையால் இந்த ப்ரச்னமே தற்காப்புச்செய்துகொள்ளமுடியாத தசையில் ம்லேச்சாதி நீதர்கள் விஷயமாகையாலே அதற்கு எத்தரமாகச் சொன்ன ப்ராயச்சித்தமும் அவர்கள் விஷயமே யொழிய ஸ்வச்சந்தமாய் மதாந்தரத்தில் சென்ற மஹாபாதக நாஸ்திக விஷயமன்றென்பதை முதலிலேயே வித்வான்கள் நிர்ண

பித்துக்கொள்ளவேண்டும். இதனலிப் பரச்னம் பண்ணின மஹர்ஷிகள், 'நாபிஸந்தி க்ருதே பாபே ஸக்ருதாசரிதே நிஷ்க்ருதி:। க்வசிந் நிஷ்க்ருதிம் ப்ராஹு: அபிஸந்தி க்ருதே விது:॥' என்கிற ஸாக்ஷாத் தேவலஸ்ம்ருதி வசனத்தினர்த்தத்தை நன்குணர்ந்தவர்கள் என்று ஏற்படுகிறது. இதினர்த்தம்- ஒருவனல் அபிஸந்தியோடு (அதாவது இதைச்செய்யவேண்டுமென்கிற எண்ணத்தோடு) ஒரு பாபம் செய்யப்பட்டாலும் ஒரு பாபமானது அபுத்தி பூர்வகமாயே அடிக்கடி செய்யப்பட்டாலும் அதற்கு இந்த லோகத்தில் நிஷ்க்ருதி இல்லை. அதாவது ப்ராயச்சித்தம் பண்ணிக்கொண்டாலும் இந்த லோகத்தில் அதைச் செய்தவனுக்கு ஸஹவாஸார்ஹதை இல்லை, என்று. சில ருஷிகள் அபிஸந்தியோடு பண்ணின பாபத்திற்கும் சகாரத்தினல் அபுத்தி பூர்வகமாகவே அடிக்கடி செய்யப்பட்ட பாபத்திற்கும் இந்த லோகத்தில் நிஷ்க்ருதியைச் சொல்லுவர்களென்பது இவ்வர்த்தத்தை நன்குணர்ந்த ரிஷிகள் புத்திபூர்வகத்திற்கு ப்ராயச்சித்தமில்லை என்று தேவலர் மதமானாலும் தன்னபிஸந்தியன்றிக்கே ம்லேச்சாதி நீதர்களுக்கு நேரும் அபுத்திபூர்வ பாபத்திற்கு ப்ராயச்சித்தம் சொல்லவேண்டும், அதிலும் பிராம்மண க்ஷத்ரிய வைச்ய சூத்திரர்களுக்குள்ள தாரதம்யத்தையும் சொல்லவேண்டுமென்று கேட்டார்கள். தேவலரும் அவர்களுக்கிணங்கி ம்லேச்சாதி நீதர்களுக்கு அங்கு நேரக்கூடிய பாபங்களின் தாரதம்யத்திற்கநுகுணமாக அவர்களை மூன்று வகையாகப்பிரித்து வர்ணபேதத்தாலே மூன்று விதமாக ப்ராயச்சித்தத்தைச் சொல்லித் தலைக்கட்டுகிறார். அதில்,

'அஹமேவ ஹி நாஸ்மீதி மேக்ஷ்யம் பாபஸம்சிதம் ।
ம்லேச்சைர் நீதேந விப்ரேண அகம்யா கமநம் க்ருதம் ॥
தஸ்ய சுத்திம் ப்ரவக்ஷ்யாமி யாவதேக ஸமா வஸேத் ।
சாந்த்ராயணம் விப்ரஸ்ய ஸபாரகம் ப்ரகீர்த்திதம்॥
பாதகச்சம் க்ஷத்ரஸ்ய பாதக்ருச்ச்ரேண ஸம்யுதம் ।
பாதமாத்ரம் து வைச்யஸ்ய சூத்ரஸ்ய திநபஞ்சகம் ॥'

என்கிற ஏழு எட்டு ஒன்பதாவது ச்லோகங்களால் ம்லேச்ச நீதனை ப்ராம்மணனுக்கு அவனுடைய ஸ்தாநகயநமாத்திரமன்றிக்கே அங்கு அபேயபாநம் அபக்ஷ்யபக்ஷணம் அகம்யகமநம் முதலானது நேர்ந்திருந்தாலும் அந்த பிராம்மணனுக்கு ஒருவருஷ பரியந்தம் சுத்தி சொல்லுகிறேன் என்று பிரதிஜ்ஞை பண்ணிக்கொண்டு கீழ் சொன்னபடி ஒருவருஷமிருந்த பிராம்மணனுக்கு ஒரு பராகமும் ஒரு சாந்திராயணமும், அப்படி ஒரு வருஷமிருந்த

க்ஷத்திரியனுக்கு ஒருபராகமும், கால் ப்ராஜாபத்யமும், வைச்யனுக்கு, பரா கத்தில் பாதியும், சூத்திரனுக்கு, அஞ்சுதினமுபவாஸமும், ப்ராயச்சித்தமாகச் செய்துகொள்ளவேண்டுமென்று சொன்னார். இங்கு, 'ஸம்வத்ஸரேணபததி பதிதேந ஸஹாசரந்' என்கிற மனுவினபிப்ராயப்படி அஜ்ஞாத க்ருதமானாலும் ஒரு வருஷத்திற்குமேல் பிராம்மணனுக்கு பிராயச்சித்தமில்லை என்பதை எண்ணி 'தஸ்யாஶுத்திம் ப்ரவக்ஷ்யாமி யாவதேகம் து வத்ஸரம்' என்று பிரதிஜ்ஞை பண்ணினார். இங்கு அவதாரணார்த்தமான சப்தத்தாலே அதற்குமேல் பிராயச்சித்தமில்லை என்று ஏற்படுகிறது. இங்கு ஒரு வருஷ பர்யந்தம் பிராயச்சித்தரார்ஹனாகச் சொல்லப்பட்ட அதிகாரி புத்தி பூர்வகபாபம் பண்ணினவனன்றென்றும் தன் மதத்தையே மனப்பூர்வகமாய் விட்டு அன்ய மதத்தில் பிரவேசித்தவனன்றென்றும் அடிக்கடி கவனத்திலிருக்கவேண்டும். இப்படி முதலில் அவ்விடத்தில் நேரும் பாபங்களை யநுவாதித்து ஜாதி தோறும் பிராயச்சித்தத்தை ஒருவிதமாகச் சொல்லி மேல்,

'பலாத்தாஸீக்ருதா யே ச ம்லேச்சசண்டாலதஸ்யுபி: ।
அஶுபம் காரிதா: கர்ம கவாதி ப்ராணிஹிம்ஸனம் ॥
கரோஷ்ட்ர விட்வராஹாணாமாமிஷஸ்ய ச பக்ஷணம் ।
தத்ஸ்த்ரீணாம் ச ததா ஸங்கம் தாபிஶ்ச ஸஹபோஜனம் ॥
மாஸோஷிதே த்விஜாதௌ து ப்ராஜாபத்யம் விஶோதனம் ।
சாந்த்ராயணம் பராகம் வா பரிஸ்ஸம் வத்ஸரோஷித: ॥'

என்கிற 17—18—19-வது ஶ்லோகங்களால்—இப்படி ம்லேச்ச நீதர்களான த்விஜாதிகள்—அதாவது பிராம்மண க்ஷத்திரிய வைச்யர்கள்—ம்லேச்சாதிகளால் பலாத்காரத்தாலே வேலைக்காரனாக்கப்பட்டாலும் கோவத தர்மாம்ஸ பக்ஷண சண்டாளீ கமனாதி கொடிய பாபங்களை செய்விக்கப்பட்டாலும் அம் மூன்று ஜாதிக்காரர்களுக்கும் பொதுவாக, ஒரு மாஸம் வரையில் பிராஜாபத்யமும் ஒருவருஷம் வரையில் ஒரு பராகமும் ஒரு சாந்திராயணமும் ப்ராயச்சித்தமென்று சொல்லப்பட்டது. இங்கு த்விஜாதிகளுக்குள் ப்ராயச்சித்த தாரதம்யமில்லை என்பதுதான் விசேஷம். இப்படி த்ரைவர்ணிக ப்ராயச்சித்தத்தை முடித்து மேல்,

> ‘ ஸம்வத்ஸரோஷித ஶூத்ரோ மாஸம் பாவகம் பிபேத் ।
> மாஸமாத்ரோஷித ஶூத்ர: க்ருச்ச்ரபாதேன ஶுத்த்யதி ॥’

என்கிற—20-வது ஶ்லோகத்தில், சூத்திரனை தனியாகவெடுத்து கீழ்சொன்ன கோவதாதி பாபங்களோடு - ஒரு மாஸம் ம்லேச்ச கிருகத்தில் வஸித்தவனுக்கு கால், பிராஜாபத்யமென்றும் ஒரு வருஷம் வஸித்தவனுக்கு அரை மாஸம் பாவகமானமென்றும் பிராயச்சித்தத்தைச் சொல்லி, மேல் பிராம்மணர்களுக்கு ஒரு வருஷம் வரையில் ப்ராயச்சித்தமுண்டானல் அவர்களில் நாலிலொன்று பிராயச்சித்தமுடைய சூத்திரனுக்கு நாலு வருஷம் வரையில் பிராயச்சித்தம் சொல்லலாமென்கிற ந்யாத்தைக் கொண்டு—

> ‘ ஊர்த்வம் ஸம்வத்ஸராத் கல்ப்யம் ப்ராயஶ்சித்தம் த்விஜோத்தமை:
> ஸம்வத்ஸரைஶ்சதுர்பிஶ்ச தத்பாவமதிகச்சதி
> ஹ்ராஸோ ந வித்யதே தஸ்ய ப்ராயஶ்சித்தே த்விஜாதிந: ’

என்கிற அடுத்த ஒன்னறை ச்லோகங்களால் முன் சொன்னபடி சூத்திரன் மிலேச்சாவாஸத்தில் நாலுவருஷமிருந்தால் முன் ஒரு வருஷத்திற்கு அவனுக்குச் சொன்ன பிராயச்சித்தத்தை நாலால் பெருக்கி பிராம்மணர்கள் பிராயச்சித்தத்தை கல்பிக்கவேண்டுமென்றும், அதற்குமேற்பட்டால் அவன் ம்லேச்ச சாதியாயே போய்விடுகிருனென்றும், அதற்குமேல் பிராம்மணர்களில் நாலிலொன்ருகச் சொன்ன ப்ராயச்சித்தஹ்ராஸமும் அதாவது குறைவும் அவனுக்கு இல்லை என்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. இங்கு வாஜபேயம் ஸ்வாமி சொல்வதைக் கொஞ்சம் கவனிப்போம். இந்த ஸ்மிருதியின் ஆரம்பத்திலேயே, ‘ ப்ராஹ்மணா: க்ஷத்ரியா வைஶ்யா: ஶூத்ரா யேசாந்யவாஸின: ’ என்று நாலு வர்ணத்தாருக்கும் பிராயச்சித்தம் கேழ்க்கப்பட்டிருக்கிறது. ‘ அபேயம் யேந ஸம்பீத அபக்ஷ்யம் வாபி பக்ஷிதம் ம்லேச்சைர்நீதேந விப்ரேண ’ என்ருரம்பித்து ஏழு எட்டு ஒன்பதாவது ஶ்லோகங்களால் வர்ண க்ரமமாக பிராயச்சித்தமும் சொல்லப்பட்டிருக்கிறது. அதில் இந்த ஸ்வாமி க்ஷத்ரியாதி மூன்று வர்ணத்தாருக்கும் பிராயச்சித்தம் சொல்லும் கீழுதாஹரித்த—‘ பாதகூடே க்ஷத்ரஸ்ய ’ என்கிற ஶ்லோகத்தைக் காட்டாமலே மேல், ‘ ஸம்ஸர்காந்தே ச விப்ராணாம் ’ என்கிற ஶ்லோகங்களை யுதாஹரித்தார்.

(இன்னும் வரும்)

॥ ஸ்ரீ: ॥

॥ ஸ்ரீமதே வகுளாபரண மஹா குரவே நம: ॥

# நம்மாழ்வாரின் வைபவமும் திருவாய்மொழியின் பெருமையும்.

இந்த ஆழ்வார் ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ப்ரவர்த்தகர்களான ஆசார்யர்களுக்குள் தலைமைப் பெற்றவரானபடியால் ப்ரபன்ன ஜனஸந்தான கூடஸ்தர் என்று ஸ்ரீஆளவந்தார் முதலிய ஆசார்யர்களினால் மிகவும் கொண்டாடப்பட்டவராவார். இவர் மூலமாகவே இந்த ஸ்ரீவிசிஷ்டாத்வைத ஸித்தாந்தம் இவ்வுலகத்தில் பரவியுள்ளது. எப்படி என்னில்:— கலியுகாரம்பத்தில் இவ்வாழ்வாராலும், மற்றும் பல ஆழ்வார்களினுடைய ஸ்ரீஸூக்திகளினாலும் ஸம்யக் ப்ரவசனம் செய்யப்பட்டிருந்த ஸ்ரீவிசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்திற்கு காலக்ரமேண லோபம் எற்பட்டுவிட்டது. இவருக்கு வெகுகாலம் பின் அவதரித்த ஸ்ரீமந்நாதமுனிகள் ஆராவமுதன் விஷயமான பத்துப் பாட்டுக்கள் அடங்கிய ஒரு திருவாய்மொழியைக்கேட்டு, அந்தத் திருவாய்மொழி ஆயிரம் பாட்டுக்களை அதிகரிப்பதில் த்வரையை யுடையவராய், மிகவும் ச்ரமப்பட்டு கண்ணிநுண்சிறுத்தாம்பு பதினொரு பாட்டுக்களையும் உபதேசிக்கப்பெற்று, அதைக்கொண்டு ஆழ்வாரைப் பலதரம் ஸ்தோத்திரம் செய்ய, அத்தால் த்ருப்தியடைந்த ஆழ்வாரும் பகவானுடைய நியமனத்தால் நித்யவிபூதியிலிருந்து மறுபடியும் இந்த லோகத்தில் பூர்வம் தாம் பரிக்ரஹித்த நம்மாழ்வாருடைய ரூபத்தோடு ஆவிர்ப்பவித்தருளி, ஸ்ரீமந் நாதமுனிகளுக்கு யோகதசையில் ப்ரத்யக்ஷமாய் நின்று ஸகலார்த்தங்களையும் உபதேசித்தருளினார் என்பது ஸ்ரீஸ்தோத்திர பாஷ்ய குருபரம்பராஸாராதி க்ரந்தங்களில் பரக்க நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இப்படி இவர் மற்ற ஆழ்வார்களைப்போல கேவலம் க்ரந்த முகமாகமட்டும் உபகாரம் செய்யாமல் ஆசார்ய பரம்பரையில் அந்தர்கதராய், இந்த ஸம்ப்ரதாயத்தை ப்ரவசனம் செய்தவராகையினாலே இவருக்கு மற்ற ஆழ்வார்களைக்காட்டிலும் விசேஷ மஹிமை ஏற்பட்டது.

## அவதாரக்ரமம்.

இவருடைய அவதார க்ரமத்தைப்பற்றி விமர்சிக்கப் புகுந்தால் நித்யஸூரிகளில் ஒருவர் பகவானால் அநுப்ரவேசிக்கப்பட்டு இந்த நம்மாழ்வாராய் அவதரித்தார் என்று திருக்குருகூர் ஸ்தலபுராணம், திருக்குறுங்குடி ஸ்தல

புராணம் முதலியவைகளிலும் சொல்லப்பட்டிருக்கிறது. அதை அநுஸரித்த ஆசார்ய ஸ்ரீஸூக்திகளில் அபிநவமாக ஒரு தசாவதாரம் பகவான் தானே பண்ணினன் என்று அருளிச்செய்யப்பட்டிருக்கிறது. சில ப்ரமாணங்களில் இவர் விஷ்வக்ஸேனர் ரூபமாகக் காரியார் என்னும் ஒருவருக்கு திருக்குமாரராகப் பகவான் தானே இந்தக் கலியுகத்தின் ஆரம்பத்தில், அதாவது கலி 43-வது நாள் வைகாசி மாதத்தில் ஒரு பௌர்ணமியில், விசாக நக்ஷத்திரத்தில் வெள்ளிக்கிழமையில் கடக லக்னத்தில் அவதரித்ததாக நிஷ்கர்ஷிக்கப்பட்டிருக்கிறது. அப்படியே சில ப்ரமாணங்களிலும் 'கலியுகத்தில் பகவான் சில நித்ய ஸூரிகளை அவதரிக்கச்செய்து அவர்களுக்குள் தான் அநுப்ரவேசித்து நின்று தனக்கு விசேஷமான கார்யங்களைச் செய்தருளுகிறான்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆக இப்படிகளில் எப்படியிருப்பினும் இவர் நித்ய ஸூரியின் அவதாரம் என்றும், பகவானுடைய ஸாக்ஷாத் அநுப்ரவேசம் பெற்றவர் என்பதும் ஸ்பஷ்டமாய் நிர்விவாதமாய் ஏற்பட்ட விஷயம். இது இப்படி இருக்க, இவர் சில இடங்களில் 'மாறி மாறிப்பல பிறப்பும் பிறந்து' என்றிவைமுதலிய இடங்களில் தம்மை ஸம்ஸாரியாக அருளிச்செய்திருப்பதும் ஸம்ஸாரியாகிய நாம் அப்படி அநுஸந்திக்கவேண்டும் என்பதை நமக்குக் கற்றுக்கொடுத்தபடி என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இவ்வர்த்தம் திருவாய்மொழியின் வ்யாக்யானமாக ஸ்ரீபரகால ஸ்வாமி அருளிச்செய்திருக்கும் 18000 படி என்னும் வ்யாக்யானத்தில் முதல் பாட்டின் கடைசியில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. மேலும் ஸ்ரீமத் பகவத்கீதையில் 'ஸாதுக்களைக் காப்பாற்றுவதற்காக' என்றருளிச் செய்திருக்கும் இடத்தில் 'ஸாதுக்கள்' என்னும் பதத்தினால் விவக்ஷிக்கப்படும் அதிகாரியின் லக்ஷணத்தை நிரூபிக்கும் ப்ரகரணத்தில் ஸ்ரீபாஷ்யகாரருடைய ஸ்ரீகீதாபாஷ்ய ஸ்ரீஸூக்தியையும், ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகனுடைய ஸ்ரீமத் தாத்பர்ய சந்திரிகா ஸ்ரீஸூக்தியையும் பராமர்சிக்கும் பொழுது அவர்கள் திருவுள்ளத்தில் கொண்டது இந்த ஆழ்வார் தாம் ஸாது பதத்திற்கு முக்ய வ்ருத்யா ப்ரதிபாத்யர் என்பது ஸ்பஷ்டமாய் ஏற்படும். இப்ரபந்தத்திற்கு ஸ்ரீபாஷ்யகாரரால் நியமிக்கப்பட்டு, ஆழ்வாரின் க்ருபைக்கு பூர்ணபாத்திரரான திருக்குருகைப்பிரான் பிள்ளானால் அருளிச்செய்யப்பட்ட 6000-படி க்ரந்தத்திற்கு வ்யாக்யானமான 24000-படியிலும் ரிஷிகள் அல்லாதவர்களுக்கு பரமாத்மாவை உள்ளபடியே ஸாக்ஷாத்கரிக்கை யுக்தமாகுமோ என்று ஆக்ஷேபித்துக்கொண்டு இவர் மனுஷ்ய வம்சத்தில் பிறந்தாரேயாகிலும் ஜனனக்ஷணம் துடங்கி மனுஷ்ய தர்மங்களான ஆஹார நித்ராதிகள் ஒன்றுமின்றிக்கே 'உண்ணும் சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையு

மெல்லாம் கண்ணன்' என்கிறபடியே பகவத் குணானுபவைகதாரகபோஷகபோக்யராய்க்கொண்டு மஹர்ஷிகளைக்காட்டிலும் அதிசயிதவைபவராகையினால் இவர் பரமாத்மாவை உள்ளபடியே ஸக்ஷாத்கரித்தருளினார் என்பது யுக்ததமமாகும் என்று நிஷ்கர்ஷிக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்திலும் ப்ரபாவ வ்யவஸ்தாதிகாரத்தில் விதுராதிகளில் காட்டிலும் அதிசயித ப்ரபாவரான ஆழ்வார்கள் என்று பொதுவாக இவருடைய ஏற்றம் அருளிச்செய்யப்பட்டிருக்கிறது. ஸ்ரீபாதுகாஸஹஸ்ரத்தில் ஸமாக்யா பத்ததி, நாத பத்ததி முதலிய பத்ததிகளில் விஸ்தாரமாக இவருடைய ப்ரபாவம் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இப்படிப் பல படியாலும் நித்ய ஸூரியின் அவதாரம் என்பது நிஷ்கர்ஷிக்கப்பட்டிருக்கச் சிலர் இவரை நித்ய ஸம்ஸாரி என்று நிரூபித்திருப்பதும் பகவானுடைய க்ருபையின் ஆதிக்யத்தை லோகத்தாருக்குக் காண்பிப்பதற்காக, அதாவது பகவானுடைய க்ருபை உண்டாயிற்றேயாகில் எவ்வளவு நீசனாயிருந்தபோதிலும் மிகவும் உயர்ந்த பதவியைப் பெறக்கூடும் என்பதை லோகத்தாருக்குக் காட்டினபடி. இவருக்கு பகவானுடைய விசேஷ கடாக்ஷம் உண்டானதை இவர்தாமே இப்ரபந்தத்தின் ஆரம்பத்தில் 'மயர்வற மதிநல மருளினன்' என்றும், இவருடைய ப்ரதம ப்ரபந்தமாகிய திருவிருத்தத்தில்,

(1) 'பெருங்கேழலார் தம் பெருங்கண் மலர்ப் புண்டரீகம் நம்மேல்
ஒருங்கே பிறழவைத்தார் இவ்வகாலம் ஒருவர் நம்போல்
வருங் கேழ்பலருளரே, தொல்லை வாழியம் சூழ்பிறப்பும்
மருங்கே வரப்பெறுமே, சொல்லு வாழி மடநெஞ்சமே'

என்றும் அருளிச்செய்திருக்கிறார்.

மேலும் பெரியோர்கள் 'இவ்வாழ்வார் க்ருஷ்ணனிடத்தில் உண்டாகிய தாஹமே (ஆசையின் மிகுதியே) ஒருவடிவு எடுத்துக்கொண்டு வந்தவர்' என்றனுஸந்தித்தார்கள். பக்தியின் மிகுதி என்னாமல் தாஹத்தின் மிகுதி என்றதால் ஆழ்வாருக்குப் பகவானிடத்தில் உண்டான த்வராதிசயமும், குண குண நிரூபணம் இல்லாமல் அத்தலையில் ஸம்பந்தமுள்ளதேதாவது ஒன்று இவருடைய ப்ரீதிக்கு அமையும் என்கிற ப்ரீத்யதிசயமும் த்யோதிதமாயிற்று. அப்படியே 'கடியன் கொடியன் நெடியமாலுலகங்கொண்ட அடியன் அறிவருமேனி மாயத்தன் ஆகிலும் கொடியவென் னெஞ்சமவ னென்றே கிடக்கு மல்லே துடிகொளிடை மடைத்தோழீ அன்னை என்செய்யுமே' என்

1. திருவிருத்தம் 45.

றிவர்தாமே அருளிச்செய்திருப்பது ஸ்ரீருக்மணி பிராட்டி கண்ணனைக் காமுறும்பொழுது ‘ஶ்ருத்வா குணாந்’ என்று பகவானுடைய குணங்களையும் அகுணங்களையும் கண்டு தன் மனம் அபஹரிக்கப்பட்டது என்று விண்ணப்பம் செய்தாப்போலே இருக்கிறது என்றறியத்தக்கது. உலகத்திலும் மிகவும் தாகித்தவன் அப்பொழுது கிடைத்த தண்ணீர் முதலியவைகளில் குணகுண விபாகம் பண்ணுமல் பருகக்காணுனின்ரேமிறே. ஆக இத்தால் இவர் அருளிச்செய்திருப்பதெல்லாம் பக்தியின் பரீவாஹமாகையாலும், பக்தி ஒன்றினுல் மாத்திரமே பகவானை உள்ளபடியே அறியமுடியும் என்பது கீதாதிகளில் நிர்த்தாரணம் செய்யப்பட்டிருப்பதினுலும் இவர் பகவானை உள்ளபடியே அனுபவித்தார் என்பது ஸ்பஷ்டமாக ஏற்படுகிறது.

## திருவாய்மொழியின் பெருமை.

இப்ரபந்தம் கேவலம் அர்த்தம், யஶஸ்ஸு முதலிய சில்வான ப்ரயோஜனத்திற்காக எழுதப்பட்டதொன்றல்ல. பகவத்க்ருபையினுல் பகவானை உள்ளபடியே ஸாக்ஷாத்கரிக்க அந்த அனுபவத்தின் ஆநந்தம் உள்ளடங்காமல் வெளியில் பெருகிவந்த சொற்களாகையாலே செவிக்கினிய செஞ்சொல்லே என்கிறபடியே கேட்பவர்களுக்குப் பரமாநந்தத்தைக் கொடுக்கக்கூடியதாயும், பகவானிடத்தில் பக்தியை வ்ருத்திசெய்யக் கூடியதாயும் இருப்பதினுல் மிகவும் உபாதேயமாயிற்று. ‘இங்குமங்கும் திருமாலன்றி இன்மை கண்டு அங்ஙனே வண்குருகூர்ச் சடகோபன் இங்ஙனே சொன்ன ஓராயிரத்திப்பத்தும் எங்ஙனே சொல்லினும் இன்பம் பயக்குமே’ 7-9-11 என்றிவர்தாமே அருளிச் செய்திருக்கிறபடியினுல் ஆழ்வாருக்கு உண்டாகிய அந்தப் பராகாஷ்டையானபாவபந்தமில்லாமல் நாம் அனுஸந்தித்தாலும் நமக்குப்பரமாநந்தத்தைஉண்டாக்குவதொன்ருகையாலும் இது விசேஷத்தை உடையது. மற்ற ரிஷிகளைப்போல் தாங்கள் அனுஷ்டிக்காத ஓர் ஶாஸ்த்ரார்த்தத்தை உபதேசித்துப்போராமல் தாம் அனுஷ்டித்த ப்ரபத்தியையே க்ரந்தமுகேன நமக்கு உபதேசித்திருப்பதினுல் இதற்கு அந்த ரிஷிகளின் ஸூக்திகளைக் காட்டிலும் உத்கர்ஷம் தெரிவிக்கப்படுகிறது. வேதாந்தார்த்தங்களை மிகவும் விசதமாக ப்ரதிபாதிப்பதினுலும் இதற்கு ஒரு விசேஷவைபவம் உண்டு. இதுமேலே தனியாக நிரூபிக்கப்படுகிறது. ஸாக்ஷாத் ச்ரியஃபதியான ஸ்ரீரங்கநாதனுல் உபய வேதாந்தாசார்யர் என்று திருநாமமிட்டுக் கௌரவப்படுத்தப்பட்ட ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகனும் “செய்ய தமிழ்மாலைகள் நாம் தெளியவோதித் தெளியாத மறைநிலங்கள் தெளிகின்ரேமே’ என்று அருளிச்செய்திருப்பது இங்கு அனுஸந்தேயம்.

இப்படி இதன் பெருமை கேவலம் கட்டுப்பாட்டினுல் ஒரு ஸம்ப்ரதாயஸ்தர்கள் மாத்திரத்திஞல் அப்யுபகமம் செய்யப்பட்டிருக்கிறது என்பதில்லை. இத்திருவாய்மொழியின் ப்ரபாவத்தை 'பாலேய் தமிழர் இசைகாரர் பத்தர் பரவு மாயிரம்' 1-5-11 என்கிறபடியே மற்றவர்களும் விசேஷமாகக் கொண்டாடியிருக்கிருர்கள். எங்ஙனே என்னில்:— ஆழ்வாருடைய அவதார ஸ்மாபனத்திற்குப்பிறகு அவருடைய திவ்யமங்கள விக்ரஹத்தை ஏறியருளப்பண்ணி, அதற்கு உத்ஸவாதிகளை நடத்திவரும்பொழுது இவருக்கு 'வேதம் தமிழ் செய்தான்' என்கிற பிருது முதலியவைகள் சொல்லுவது தகாது என்று அந்தக்காலத்தில் இருந்த சங்கப்புலவர்கள் ஆக்ஷேபிக்க, அப்பொழுது பகவந்நியமனத்திஞல் இவருடைய ஸ்ரீஸூக்தியில் 'கண்ணன் கழலிணை' என்னும் ஒருபாட்டை ஒரு ஏட்டில் எழுதி சங்கத்திற்கு அனுப்ப, தெய்விகம் பெற்ற சங்கப்பலகையும் ஆழ்வாரின் ஸ்ரீஸூக்தியின் மஹிமையை உள்ளபடியே அறிந்ததொன்ருகையினுலே மற்ற எல்லாவற்றையும் கீழே தள்ளிவிட்டு இதை மாத்திரம் தரித்துக்கொண்டு நின்றது. புலவர்களும் தங்களுடைய தெரியாத்தன்மைக்கு வருந்தி ஆழ்வார் விஷயமாக

'சேமம் குருகையோ செய்ய திருப்பாற்கடலோ,
நாமம் பராங்குசமோ நாரணமோ — தாமம்
துளவமோ வகுளமோ தோளிரண்டோ நான்கு
முளவோ பெருமானுனக்கு'

என்றும்,

'ஈயாடுவதோ கருடற்கெதிரே யிரவிக்கெதிர் மின்மினியாடுவதோ,
நாயாடுவதோ உறுமிப் புலிமுன் நரிகேசரிமுன் நடையாடுவதோ,
பேயாடுவதோ வழகூர்வசிமுன் பெருமான் வகுளாபரணன் னருள்கூர்ந்
தோவாதுரையாயிரமாமறையின்னொருசொற்பொறுமோஉலகிற்கவியே'

என்றும் அபராதக்ஷாபணம் செய்துகொண்டார்கள் என்கிற வ்ருத்தாந்தத்திஞல் தெரிவிக்கப்படுகிறது. மேலும் குறளாசிரியராகிய திருவள்ளுவரினுலும் 'குறுமுனிவன் முத்தமிழு மென்குறளு நங்கைச் சிறுமுனிவன் வாய்மொழியின் சேய்' என்கிறபாட்டில் அகஸ்த்ய மஹரிஷியினுல் செய்யப்பட்ட தமிழ்ப்பாஷையின் வ்யாகரணத்திற்கும் தன்னுடைய குறளுக்கும் இத்திருவாய்மொழியே மூலக்ரந்தம் என்பது வெளியிடப்பட்டது. ஔவையும்,

'ஐம்பொருளுநாற்பொருளு முப்பொருளிற் பெய்தமைந்த
செம்பொருளை யெம்மறைக்கும் சேட்பொருளைத் தண்குருகூர்ச்

சேய்மொழியதென்பர் சிலரியா னிவ்வுலகின்
தாய்மொழியதென்பேன் றகைந்து '

என்கிற பாட்டினுல் அர்த்த பஞ்சகம் முதலிய அர்த்தங்களை ப்ரதிபாதிக்கும் இத்திருவாய் மொழியைச் சிலர் தனித்தொரு த்ரமிடவேதம் என்பார்கள். அதை நான் ஒப்புக்கொள்ளாமல் இதுஸர்வலோக ஸ்ருஷ்டி கர்த்தாவான பகவானுல் ஆதிகாலத்தில் ப்ரும்மாவுக்குஉபதேசித்த வேதமென்றே சொல்லுவேன் என்று இதின் நித்யத்வத்தை வெளியிட்டாள். இடைக்காடரினுலும்,

' சேய்மெழிரயோ தாய்மொழியோ செப்பில்இரண்டுமொன் றவ்
வாய்மொழியை யாருமறையென்பர் — வாய்மொழி போ
லாய்மொழிகள் சாலவுளவெனினு மம்மொழியின்
சாய்மொழி என்பேன் தகைந்து '

என்கிறபாட்டில் இப்ரபந்தம் வேதமென்கிற விஷயத்தில் ஒரு விவாதம் இல்லை என்பதும் இரண்டுவிதமான (ஸம்ஸ்க்ருத த்ராவிட ரூபங்களான) வேதங்கள் ஒன்றேயென்பதும், சிறந்த க்ரந்தங்கள் என்று சொல்லக்கூடியவை பல இருந்தாலும் அவைகள் எல்லாம் இக்ரந்தத்தின் சாயையை அனுஸரித்ததென்பதும் வெளியிடப்பட்டது. இப்ரபந்த கர்த்தாவாகிய ஆழ்வாருடைய ப்ரபாவாதிசயமும்,

' வாய்க்கும் குருகைத் திருவீதி எச்சிலைவாரியுண்ட
நாய்க்கும் பரமபதமளித்தாய் அந்த நாயோடிந்தப்
பேய்க்குமிடமளித்தாற் பழுதோ பெருமாள் மகுடம்
சாய்க்கும்படிக்குக் கவிசொல்லு ஞானத் தமிழ்க்கடலே '

என்று சொல்லப்பட்டிருக்கிறது. கம்பநாட்டாழ்வானுலும் இவ்வாழ்வாருடையவும், இப்ரபந்தத்தினுடையவும் ப்ரபாவம் விஸ்தாரமாக சடகோபரந்தாதி என்னும் க்ரந்தத்தில்,

' சாதிக்குமே பரதத்துவத்தைச் சமயத்திருக்கைச்
சேதிக்குமே யொன்று சிந்திக்குமே யதனைத் தெரிய
போதிக்குமே யெங்குமோங்கிப்பொது நிற்குமெய்யைப் பொய்யைச்
சோதிக்குமே உங்கள் வேதமெங்கோன்றமிழ்ச் சொல்லெனவே '

என்றும், ' வேதத்தின் முன்செல்க மெய்யுணர்ந்தோர் விரிஞ்சன் முதலோர் கோதற்ற ஞானக்கொழுந்தின் முன்செல்க குணங்கடந்த போதக்கடலெங்கடென் குருகூர்ப் புனிதன் கவியோர் பாதத்தின் முன் செல்லுமே தொல்லை மூலப் பரஞ்சுடரே ' என்றும் பலமுகமாக வெளியிடப்பட்டிருக்கிறது.

## திருவாய்மொழியின் நடையும்தமிழ் லக்ஷணங்களின் பூர்த்தியும்.

இப்ரபந்தம் ஸம்ஸ்க்ருத பதங்கள் கலசாமல் சுத்தமான தமிழ் நடையில் எழுதப்பட்டிருக்கிறது என்பது,

'சார்ந்த இருவல்வினைகளும் சரித்து மாயப்பற்றறுத்து
தீர்ந்து தன்பால்மனம் வைக்கத் திருத்தி வீடு திருத்துவான்
ஆர்ந்தஞானச்சுடராகி அகலம் கீழ்மேலளவிறந்து
நேர்ந்த உருவாய் அருவாகும் இவற்றினுயிராம் நெடுமாலே'

இத்யாதி பாசுரங்களினால் வ்யக்தமாக்கப்படுகிறது. இதில் தமிழ் ப்ரபந்தங்களுக்கு லக்ஷணமான நகர சிறப்பு, நிலவளம், முதலியவையும், ச்ருங்கார ரஸத்தின் ஸ்தாயியான தூதப்ரேஷணம், மடலூர்தல், வெறிவிலக்கு, பிரிவாற்ருமை, ஊடல் (ப்ரணயகலஹம்), தாய் இரங்கல், தோழி இரங்கல், தனி இரங்கல், கலவி உரைத்தல் முதலியவைகள் விஸ்தாரமாக அருளிச்செய்யப்பட்டிருக்கின்றன. இவை சில உதாஹரணங்களுடன் நிரூபிக்கப்படுகின்றன.

### நகரச்சிறப்பு நிலவளம்.

'வானார் வண் கமுகும் மதுமல்லிகை கமழும்
தேனார் சோலைகள் சூழ் திருவல்ல வாழ் உறையும்'—5-9-1

என்றும்,

'பொன்திகழ் புன்னைமகிழ் புதுமாதவி மீதணவி
தென்றல் மணங்கமழும் திருவல்ல வாழ் நகருள்'—5-9-2

என்றும்,

'வளரிளம் பொழில் சூழ்மாலிருஞ்சோலை'—2-10-1

என்றும்,

'மறியொடு பிணை சேர்மாலிருஞ் சோலை'—2-10-6

என்றும்,

'அணி பொழில் சூழ் திருவாறன் விளை'—7-10-1.

என்றும்,

'கரும்பும் பெருஞ் செந்நெலும் வயல்சூழ் திருவாறன் விளை' 7-10-1

என்றும்,

'ஊர்வளங்கிளர் சோலையும் கரும்பும் பெரும் செந்நெலும் சூழ்ந்து
ஏர்வளங்கிளர் தண்பணை குட்ட நாட்டுத் திருப்புலியூர்' 8-9-4

என்றும்,

‘ மெல்லிலைச்செல்வ வண் கொடிப் புல்கவிங் கிளந்தாள் கமுகின்
முல்லிலை மடல் வாழைஈன்கனி சூழ்ந்து மணம் கமழ்ந்து
புல்லிலைத் தெங்கினூடுகாலுலவும் தண் திருப்புலியூர் ’ 8-9-7

என்றும், இப்படிப்பல இடங்களில் பரக்க நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

தூதப்ரேஷணம்.

இது,

‘ அஞ்சிறைய மடநாராயளியத்தாய் நீயு நின்
அஞ்சிறைய சேவலுமாய் ஆவாவென்றெனக்கருளி
வெஞ்சிறை புள்ளுயர்த்தார்க்கு என் விடுதூதாய்ச் சென்றக்கால்
வன்சிறையில் அவன் வைக்கில் வைப்புண்டால் என் செய்யுமே ’ 1-4-1

என்றும்,

‘ பொன்னுலகாளீரோ புவனிமுழு தாளீரோ
நன்னல புள்ளினங்காள் வினையாட்டியேன் நானிரந்தேன்
முன்னுலகங்களெல்லாம் படைத்த முகில் வண்ணன் கண்ணன்
என்னலங்கொண்டபிரான் தனக்கென் நிலைமை யுரைத்தே ’ 6-8-8

என்றும்,

‘ எங்கானுலகம் கழிவாய் இரைதேர்ந்திங் கினிதமரும்
செங்கால்மட நாராய் திருமூழிக்களத்துறையும கொங்கார் பூந்துழாய்முடி
எங்குடக்கூத்த ர்க்கு என் தூதாய்
நுங்கால்கள் என்தலைமேல் கெழுமீரோ நுமரோடே’ 9-7-1 ’

என்றும் அருளிச்செய்யப்பட்டிருக்கிறது

மடலூருதல்.

‘ நாணும் நிறையும் கவர்ந்து என்னை நன்னெஞ்சம் கூவிக்கொண்டு
சேணுயர்வானத்திருக்கும் தேவப்பிரான் தன்னை
ஆணை என் தோழீ ! உலகு தோறு அலர் தூற்றி ஆம்
கோணைகள் செய்து குதிரியாய் மடலூர்துமே ’ என்றும், 5-3-9,

‘ யாம்மடலூர்தும் எம் ஆழியங்கைப் பிரானுடை
தூமடல் தண்ணந்துழாய் மலர்கொண்டு சூடுவோம்
யாம் மடமின்றி தெருவுதோறு அயல் தையலார்
நாமடங்காப்பழி தூற்றிநாடும் இரைக்கவே ’ 5-3-10.

என்றும் அருளிச் செய்யப்பட்டிருக்கிறது.